# சேவா வாணி

மார்ச் - 2025



ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

# பிரேம தாரா

(பகவான் பாபா தனது மாணவர்களுக்கு எழுதிய கடிதங்களின் தொகுப்பு)

*(26 ஜனவரி 1973)*

## பிருந்தாவனத்து குழந்தைகளுக்கு அன்னையின் அன்புக்கடிதம்

**என் மாணவர்களே,**

நற்குணம் என்பது, பொய்மையோ அல்லது நடக்க முடியாததோ அல்ல. அது வாழ்க்கையின் உண்மையான மதிப்பீட்டை தரும் ஒரு காரணியே. நற்குணமற்ற வாழ்க்கை ஒரு உண்மையான வாழ்க்கையல்ல என்பது மட்டுமன்றி அது ஒருவனை துன்பப்படுகுழியில் இழுத்துத் தள்ளிவிடும் தீயனவற்றின் நாசகார நடனமேயாகும். நற்குணமென்பது உண்மையான ஆனந்தத்திற்கான பாதை. பகுத்தாய்ந்து பார்த்தால் நிறைவில், நல் தன்மை என்பது தனியான ஒன்றல்ல என்பது விளங்கும்.



நற்றன்மை என்பது நற்குணங்களைப் பயின்று, இருமைத்தன்மையைக் கடந்து வாழ்க்கை முழுவதும் ஒருமையுடன் இருப்பதனை மீறாத ஒரு தன்மையுமாகும்.

*(தொடரும் ...)*

*அன்புடனும் அருளாசிகளுடனும்*

**- பாபா**

## ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம், தமிழ்நாடு தெற்கில் இருந்து **3** பிரிவுகளிலும் மொத்தம் **108** தனித்துவமான செயல்பாடுகள் **மார்ச் 2025** நடந்தன

| ஆன்மிகப் பிரிவு | சேவைப் பிரிவு |
|---|---|
| **35** | **50** |

| கல்விப் பிரிவு |
|---|
| **23** |

# ஏகாதச ருத்ர பாராயணம்

திருநெல்வேலி 30.3.25 **41** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் 100வது பிறந்தநாளின் ஒரு பகுதியாக அவரின் பூரண அருளாசியுடன் 30.3.2025 அன்று திருநெல்வேலி மாவட்ட ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்கள் சார்பாக ஏகாதச ருத்ர பாராயணம் மற்றும் பகவானின் பாதுகைகளுக்கு 11விதமான அபிஷேக ஆராதனையும் வண்ணார்பேட்டை சமிதியில் நடைபெற்றது. இதில் மகளிர் 24 பேரும் ஆண்கள் 17பேரும் கலந்து கொண்டனர்.



## நாராயண சேவை

திருநெல்வேலி 23.3.25 **25** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் 100வது பிறந்தநாள் வைபவத்தின் ஒரு பகுதியாக திருநெல்வேலி மாவட்ட ஸ்ரீசத்ய சாயி சேவா நிறுவனங்கள் சார்பாக 23.3.2025 ஞாயிற்றுக்கிழமை எல்லா சமிதியிலுள்ள மகிளா அங்கத்தினர்கள் 40பேர் அவரவர்கள் இல்லத்தில் தயார் செய்த அன்னங்களை மொத்தமாக பாளையங்கோட்டை சமிதியில் வைத்து பொட்டலங்கள் செய்து, 504பொட்டலங்களாக சேர்த்து திருநெல்வேலி அருகிலுள்ள சுத்தமல்லி கிராமத்திலுள்ள தொழுநோய் காப்பகம் மற்றும் அருகிலுள்ள குடிசைப் பகுதியிலுள்ள பெரியவர்கள் மற்றும் தூய்மைப்பணியாளர்கள் காலனியிலுள்ளகுழந்தைகளுக்கு நாராயண சேவையாக வழங்கினார்கள். இதில் 12 மகிளா மற்றும் 9 ஆண் சேவாதள்கள் பால விகாஸ் மாணவர்கள் 4 பேர் கலந்து கொண்டனர்.



## கண் சிகிச்சை முகாம்

திருநெல்வேலி 16.3.25 **71** பயனாளிகள்

பகவானின் பெருங்கருணையினாலும் சங்கல்பத்தினாலும் 16/03/2025 ஞாயிற்றுக்கிழமை தென்காசி சமிதி சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம் தென்காசியில் மிகச்சிறந்த முறையில் நடைபெற்றது. இந்த முகாமில் 79 நபர்கள் பயன் பெற்றனர். இதில் 14 ஆண்கள் 17 பெண்கள் கண்புரை அறுவை சிகிச்சைக்காக நெல்லை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த முகாமில் 16 ஆடவர் சேவை செய்தனர்.



# கிரிக்கெட் போட்டி

திருவண்ணாமலை 2.3.25

காஞ்சிபுரம் வடக்கு காஞ்சிபுரம் தெற்கு மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிடயே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் திருவண்ணாமலை மாவட்டம் இரண்டாமிடம் பெற்று தேர்வாகி உள்ளனர். இதனை பகவானின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.



# கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் விழா

**திருவண்ணாமலை** 5.3.25

காஞ்சிபுரம் வடக்கு காஞ்சிபுரம் தெற்கு மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்கலிடயே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் திருவண்ணாமலை மாவட்டம் இரண்டாமிடம் பெற்று தேர்வாகி உள்ளது. கிரிக்கெட் வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக நமது மாநில பிரசாந்தி சேவை ஒருங்கிணைப்பாளர்கள் பாலசுப்ரமணியம் சாய்ராம், ராஜன் சாய்ராம் ஆகியோர் தங்கள் திருக்கரங்களால் விளையாட்டு வீரர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.





# பேரிடர் மேலாண்மை பயிற்சி

திருவண்ணாமலை 5.3.25 **80** பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபாவின் அருட்பெரும் கருணையினால் 05.03.2025 அன்று "பேரிடர் மேலாண்மை" என்ற தலைப்பில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுத்துறை பணியாளர்களுக்கு நமது ஸ்ரீ சத்ய சாய் சேவா பேரிடர் மேலாண்மை குழு திரு ராஜசேகரன் சாய் ராம் அவர்களால் பயிற்சி நடத்தப்பட்டது. இதில் 80 அலுவலர்கள் பயன் பெற்றனர்.

## 100 மாத்ரு பூஜை

திருவண்ணாமலை | 30.3.25 | 400 பயனாளிகள் | 360 சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பிற்குரிய பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாய் பாபா அவர்களின் 100 ஆவது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சமிதியில் 30-03-2025 அன்று காலை 9:30 மணியளவில் பாலவிகாஸ் குழந்தைகள் பங்கேற்ற மாத்ரு பூஜை நடைபெற்றது.

இந்த சிறப்புமிக்க நிகழ்ச்சியில் 103 பாலவிகாஸ் குழந்தைகளும் மற்றும் 260 பெற்றோர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நமது ஸ்வாமியின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு 100 குழந்தைகளால் இந்த மாத்ரு பூஜை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக செய்யப்பட்டது.

இந்த புனிதமான நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்டக்கல்வி ஒருங்கிணைப்பாளர், ஆரணி சமிதி ஒருங்கிணைப்பாளர், சமிதி குருமார்கள், உறுப்பினர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் சுமார் 400 ஸாய் அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

நிகழ்ச்சியின் முடிவில் மஹா மங்கள ஆரத்தி காண்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து நித்ய நாராயண சேவை நடைபெற்றது.

# பாலவிகாஸ் குழந்தைகள் நடத்திய நூற்றாண்டு விழா சிறப்பு பஜன்

திண்டுக்கல் 15.3.25 **12** பயனாளிகள்

**12** சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு பகவானின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 15-03-2025 அன்று மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை நம் பாலவிகாஸ் பெற்றோர் திருமதி அபிராமி இல்லத்தில் பழனி பாலவிகாஸ் குழந்தைகளின் சிறப்பு பஜனை நடை பெற்றது. இதில் குழந்தைகள் 7, பெற்றோர் 5 பேர்கள் மொத்தம்- 12 பேர்கள் கலந்து கொண்டார்கள். பஜனையின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.





Love All, Serve All
Help Ever, Hurt Never

சேவா வாணி
ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)
தமிழ்நாடு - தெற்கு

மார்ச்
2025

# பாலவிகாஸ் குழந்தைகள் இல்லத்தில் நடைபெற்ற சிறப்பு பஜன்

திண்டுக்கல் 22.3.25 **15** பயனாளிகள்

**15** சேவாதளத்தொண்டர்கள்

பழனி பாலவிகாஸ் குழந்தைகளின் சிறப்பு பஜனை பகவானின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 22 -03-2025 அன்று மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை நம் பாலவிகாஸ் பெற்றோர் திருமதி கோமதி இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் குழந்தைகள் 7 பேர்கள் பெற்றோர்கள் 8 பேர்கள் மொத்தம் 15 பேர்கள் கலந்து கொண்டார்கள். பஜனையின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.





# திருக்கோவில் உழவாரப்பணி

திண்டுக்கல் 5.3.25 **7** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளால் 05.03.25 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை குபேர லிங்கேஸ்வரர் திருக்கோவிலில் உழவாரப்பணி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 6 மகிளாஸ் மற்றும் 1 ஆடவர் கலந்து கொண்டு சேவையாற்றினர்.

# 100 இல்லங்களில் சிறப்பு பஜன் - 17 சாய் இல்லங்களில் நடைபெற்றது

திண்டுக்கல் 1.3.25 150 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 100 இல்லங்களில் சிறப்பு சாய் பஜன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெற்றது. 16வது சிறப்பு பஜன் திரு. சுரேஷ் சாய்ராம், திண்டுக்கல் - 01.03.2025, 17வது சிறப்பு பஜன் திரு. ரவி சாய்ராம், திண்டுக்கல் - 02.03.2025, 18வது சிறப்பு பஜன் சத்யசாய் சமிதி திண்டுக்கல் - 06.03.2025, 19வது சிறப்பு பஜன் திருமதி. கலா சாய்ராம், திண்டுக்கல் - 08.03.2025, 20வது சிறப்பு பஜன் திரு. ரவி சாய்ராம், கொடைக்கானல்- 08.03.2025

21வது சிறப்பு பஜன் திரு. சங்கீதா சாய்ராம், பழநி - 08.03.2025, 22வது சிறப்பு பஜன் திரு. கௌதம் சாய்ராம், திண்டுக்கல் - 14.03.2025, 23வது சிறப்பு பஜன் திருமதி.தயாளி சாய்ராம், கொடைக்கானல் - 15.03.2025, 24வது சிறப்பு பஜன் திருமதி. அபிராமி சாய்ராம் , பழநி - 15.03.2025, 25வது சிறப்பு பஜன் திருமதி. அபிராமி சாய்ராம், திண்டுக்கல் - 16.03.2025

26வது சிறப்பு பஜன் திருமதி. வாசுகி சாய்ராம், திண்டுக்கல் - 22.03.2025, 27வது சிறப்பு பஜன் திருமதி. கோமதி சாய்ராம் , பழநி - 22.03.2025, 28வது சிறப்பு பஜன் திருமதி. வைர சுந்தரி சாய்ராம் , கொடைக்கானல்- 22.03.2025, 29வது சிறப்பு பஜன் திருமதி. இந்துமதி சாய்ராம்,திண்டுக்கல் - 26.03.2025, 30வது சிறப்பு பஜன்

திரு. தங்கமயில் செந்தில் சாய்ராம், கொடைக்கானல் - 26.03.2025

31வது சிறப்பு பஜன் அண்ணாமலையார் திருக்கோயில் வளாகத்தில் - 27.03.2025 32வது சிறப்பு பஜன் திருமதி.தேவி கண்ணன் சாய்ராம், திண்டுக்கல்- 28.03.2025





# சிறப்பு 100 பஜன் பாடல்கள் நிகழ்ச்சி

திண்டுக்கல் 9.3.25 43 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 09-03-25 அன்று திருமதி.தங்கமணி சாய்ராம் இல்லத்தில் காலை 07.35 மணி முதல் மதியம் 01.30 மணி வரை 100 பஜன் பாடல்கள் பகவான் அவர்களது பொற்பாத கமலங்களில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் பால விகாஸ் குழந்தைகள், பெற்றோர்கள், உறுப்பினர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் என 43 நபர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# சிறப்பு இலவச மருத்துவ முகாம்

திண்டுக்கல் | 22.3.25 | **35** பயனாளிகள் | **4** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களது பேரருளினால் 22-03-25 அன்று காலை 9.30 மணி முதல் 11.30 மணி வரை இலவச பொது மருத்துவ முகாம் டி.வாடிப்பட்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 2 மகிளாஸ் 2 ஆண் சேவாதள தொண்டர்கள் மற்றும் 35 பயனாளிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

# முதியோர் இல்ல பராமரிப்பு மற்றும் நாராயண சேவை

**தர்மபுரி & கிருஷ்ணகிரி** 23.3.25

சுவாமியின் நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, வேப்பனப்பள்ளி சமிதி பாலவிகாஸ் குழந்தைகள் , மகிளாஸ் மற்றும் ஆண்கள் ஆகியோர் கிருஷ்ணகிரியில் உள்ள ஒரு முதியோர் இல்லத்திற்கு (அவ்வை இல்லம்) 23.03.2025 அன்று வருகை தந்தனர்.

முதியோர் இல்லத்தில் பஜனைகள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் நாராயண சேவை ஆகியவை நடைபெற்றன. முதியோர்கள் குழந்தைகளின் நிகழ்ச்சிகளால் ஈர்க்கப்பட்டனர். உணவு, பிஸ்கட், சிற்றுண்டி, மோர் பாக்கெட்டுகள் மற்றும் இனிப்புகள் விநியோகிக்கப்பட்டன.

முதியோர்களின் எண்ணிக்கை: 40 பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை. பாலவிகாஸ்: 09 மகிளாஸ்: 11 ஆண்கள்: 3

# தெலுங்கு புத்தாண்டு - உகாதி சிறப்பு பஜன்

தர்மபுரி & கிருஷ்ணகிரி

29.3.25

20 சேவாதளத்தொண்டர்கள்

தெலுங்கு புத்தாண்டை முன்னிட்டு, நமது கிருஷ்ணகிரி சமிதி இந்த புனித நாளில் சிறப்பு பஜனை நடத்தியது. இதில் வேத மந்திரங்கள், ஸ்ரீ சத்ய சாய் 108 நாமாவளிகள், பஜனைகள் ஆகியவை இடம்பெற்றன, மங்கள ஆரத்தி மற்றும் பிரசாத விநியோகத்துடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.



# ரமலான் சேவை

**தர்மபுரி & கிருஷ்ணகிரி** 29.3.25 **50** பயனாளிகள்

R. S. லட்சுமி புரம் பகுதியில் உள்ள பள்ளிவாசலில் ரமலானை முன்னிட்டு மாலை நோன்பு முடிக்க வந்த இஸ்லாமிய சகோதரர்களுக்கு நம்முடைய கிருஷ்ணகிரி இரண்டு சமிதிகள் சார்பாக ரோஸ் மில்க் மற்றும் பேரீச்சம் பழங்கள் டைமண்ட் கற்கண்டு அடங்கிய பொட்டலங்கள் வழங்கப்பட்டது. நம்முடைய சாய் சேவாதள்கள் 6 பேர் கலந்து கொண்டார்கள், 50 இஸ்லாமிய சாய் சகோதரர்கள் பயனடைந்தார்கள்.

# நீர் மோர் மற்றும் நாராயண சேவை

தர்மபுரி & கிருஷ்ணகிரி | 14.3.25 | **2000** பயனாளிகள் | **40** சேவாதளத்தொண்டர்கள்

ஒசூர் ஸ்ரீ சந்திர சூடேஸ்வரர் தேர் திருவிழாவை முன்னிட்டு நமது சமிதியின் சார்பில் பொது மக்களுக்கு நீர் மோர் மற்றும் நாராயண சேவை வழங்கப்பட்டது. பயனாளர்கள் எண்ணிக்கை : 2000 பேர்.

# இரத்ததான விழிப்புணர்வு திட்டம் முகாம்

தர்மபுரி & கிருஷ்ணகிரி 14.3.25

83 சேவாதளத்தொண்டர்கள்

அன்பின் திரவம் திட்டம் (Liquid Love) கீழ் இரத்ததான விழிப்புணர்வு மற்றும் கொடையாளர்கள் சேர்ப்பு முகாமும் நடத்தப்பட்டது. புதிய இரத்த கொடையாளர்கள் சேர்ப்பு - 83 பேர்.

# ஏகாதச ருத்ர பாராயணம் - ஸ்ரீ கைலாசநாதர் கோவில், பேரிகை

தர்மபுரி & கிருஷ்ணகிரி 23.3.25

75 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் 100 வது பிறந்த வருடத்தை முன்னிட்டு சமிதியின் சார்பாக ஒசூரை சுற்றி அமைந்துள்ள புராதனமான சிவ ஆலயங்களில் ஏகாதச ருத்ர பாராயணம் செய்ய பிரார்த்தனை ஸ்வாமியிடம் சமிதி அங்கத்தினர்களால் செய்யப்பட்டது .அதன் தொடர்ச்சியாக முதலாவது தலமாக பேரிகை ஊரில் அமைத்துள்ள ஸ்ரீ கைலாசநாதர் ஆலயத்தில் ஏகாதச ருத்ர பாராயணம் மற்றும் பஜனை செய்யப்பட்டது .கலந்து கொண்ட பொது மக்களில் விருப்பம் உள்ளவர்களுக்கு சனாதன சாரதி புத்தகம் பிரசாதமாக வழங்கப்பட்டது. நிறைவில் பங்குபெற்றவர்களுக்கு ஸ்வாமியின் பிரசாதம் வழங்கப்பட்டது.

# உழவாரப்பணி

தர்மபுரி & கிருஷ்ணகிரி 2.3.25

30 சேவாதளத்தொண்டர்கள்

சமிதியின் அங்கத்தினர்கள் இணைந்து ஒசூரில் உள்ள ஸ்ரீ கங்கா பரமேஸ்வரி ஆலயத்தை தூய்மை செய்யும் பணியை மேற்கொண்டனர் .

# கிராம பாலவிகாஸ் வகுப்பு தொடக்கம்

திருப்பூர் | 1.3.25 | 6 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சமிதி சார்பில் ரெட்டாரவலசு கிராமத்தில் பாலவிகாஸ் வகுப்பு 01.03.2025 அன்று தொடங்கப்பட்டது. இதில் பால விகாஸ் மாணவர்கள் 20 பேரும் கொடுவாய் பஜனா மண்டலி ஒருங்கிணைப்பாளர் திரு. கணேஷ் சாய்ராம், பாலவிகாஸ் குரு திரு. முருகானந்தம் மற்றும் சமிதி உறுப்பினர்கள் ஐந்து பேர் கலந்து கொண்டனர்.





## ஏகாதச ருத்ர பாராயணம்

திருப்பூர் 2.3.25 **463** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் 02.03.25 அன்று திருப்பூர் நல்லூர் பகுதியில் அமைந்துள்ள ஈஸ்வரன் கோவிலில் திருப்பூர் சாய் சகோதர சகோதரிகள் 80 பேர் ஒன்று சேர்ந்து 5-ஆவது ஏகாதச ருத்ர பாராயணம் காலை 8 மணி முதல் மதியம் 12 மணி வரை மிகவும் சிறப்பாக நடத்தினார்கள்.

6-ஆவது ருத்ர பாராயணம் 08.03.2025 அன்று காலை 08.30 மணிக்கு உடுமலைப்பேட்டை திருமூர்த்தி மலையில் பகவானின் கிருபையால் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் 42 மகிளாக்கள் 30 ஆடவர் 6 குழந்தைகள் என 78 பேர் கலந்து கொண்டு பகவானின் பேரருளினை பரிபூரணமாக பெற்றனர்.

7- ஆவது ருத்ர பாராயணம் நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய பெரும் கருணையினால் 11.03 2025 அன்று மாலை 4.30 மணியளவில் பிரதோஷத்தை முன்னிட்டு பூச்சக்காடு இரண்டாவது வீதி மங்களம் ரோடு செல்வ விநாயகர் கோவிலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 40 சாய் அன்பர்கள் கலந்துகொண்டு தெய்வீக ஆனந்தத்தை அனுபவித்தனர்.

8-ஆவது ருத்ர பாராயணம் நிகழ்ச்சியாக 16.03.2025 அன்று காலை 7 மணிக்கு பழங்கரை ஸ்ரீ முன்தோன்றீஸ்வரர்

ஆலயத்திலும் அதனை தொடர்ந்து. 9-ஆவதாக ஆதியூர் ஸ்ரீஆதீஸ்வரர் ஆலயத்திலும், 10-ஆவதாக குன்னத்தூர் ஸ்ரீ குன்றுபுரீஸ்வரர் ஆலயத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 11 ஆண்கள், 23 மகிளா, 5 பால விகாஸ் மாணவர்கள் ஆக மொத்தம் 39 அன்பர்கள் கலந்து கொண்டு ஆனந்தம் அடைந்தார்கள்.

11 & 12-ஆவது ருத்ர பாராயணங்கள் 21.03.2025 அன்று காலை 8.00 மணி முதல் பகல் 12.30 மணிவரை நம் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தில்லை நகரில் இரத்தின லிங்கேஸ்வரர் திருக்கோவில் மற்றும் ருத்ரப்ப நகர் ஸ்ரீ விசாலாட்சி உடனமர் ஸ்ரீ பஞ்சமுக லிங்கேஸ்வரர் திருக்கோவில்களில் நமது சாய் அன்பர்களால் சிறப்பாக பாராயணம் செய்யப்பட்டது. இதில் 50 பேர்களுக்கும் மேலாக பொது மக்கள் உட்பட கலந்து கொண்டு பகவானின் பேரருளினைப் பெற்றனர்.

13-ஆவது ருத்ர பாராயணம் நிகழ்ச்சியாக 23.3.2025 அன்று காலை 8 மணியிலிருந்து 11.30 வரை பேரூர் பட்டீஸ்வரர் ஆலயத்தில் கோயம்புத்தூர் மாவட்டத்துடன் இணைந்து ருத்ர பாராயணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது அதில் 55 பேர் கலந்து கொண்டு பகவானின் பேரருளினைப் பெற்றனர்.

14-ஆவது ருத்ர பாராயணம் ஆனது நமது அன்பு தெய்வத்தின் பரிபூரண கிருபையால் 23.3.2025 அன்று மாலை 4 மணிக்கு அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோயிலில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதில் 45 பேர் கலந்து கொண்டனர்.

15-ஆவது(15/108) ருத்ர பாராயணம் நிகழ்ச்சியாக 27.3.2025 வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு எஸ்.ஏ.பி.பேருந்து நிலையத்தின் அருகில் மாரியம்மன் கோயில் முதல் வீதியில்

அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ராமலிங்க சௌடேஸ்வரி திருக்கோயிலில் பிரதோஷ நேரத்தில் ருத்ர பாராயணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது அதில் 36 சாய் அன்பர்களும் 40 பேர் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.





# இலவச கண் சிகிச்சை முகாம்

திருப்பூர் 2.3.25 **232** பயனாளிகள்

**30** சேவாதளத்தொண்டர்கள்

திருப்பூர் மாவட்டம் ஸ்ரீ சத்ய சாய் சேவா சங்கம் மற்றும் அரவிந்த் கண் மருத்துவமனையும் இணைந்து நடத்திய இலவச கண் சிகிச்சை முகாம் பி.என் ரோடு ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கண் பரிசோதனை செய்யப்பட்டவர்கள் - 232, கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் - 41, கண் கண்ணாடி வழங்கப்பட்டவர்கள் - 88.

# அமிர்த கலசம் வழங்குதல்

திருப்பூர் 6.3.25 **4** பயனாளிகள்

பகவான் ஸ்ரீ சத்ய சாய்பாபா அவர்களுடைய கருணையினால் 06.03.2025 அன்று இணையதள வலைப்பக்க மேம்பாட்டு பயிற்சியில் (Web Development course) பயிற்சி பெறும் யுவதிகள் சார்பாக மளிகை பொருட்கள் அடங்கிய அமிர்த கலசம் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்பட்டது.



# முதலுதவி பயிற்சி முகாம்

திருப்பூர் | 8.3.25 | 20 சேவாதளத்தொண்டர்கள்

ஒவ்வொரு வருடமும் மார்ச் 4 முதல் மார்ச் 10 வரை தேசிய பாதுகாப்பு வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இதை முன்னிட்டு பகவானின் திருவருளால், 08.03.25 அன்று ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் பேரிடர் மேலாண்மை குழு சார்பாக கோவை மாவட்ட பேரிடர் மேலாண்மை ஒருங்கிணைப்பாளர் திரு. உதய் குமார் சாய்ராம் மற்றும் சூலூர் திரு. ரமேஷ் சாய்ராம் அவர்கள் முதலுதவி பயிற்சி முகாமை திருப்பூர் மாவட்ட தமிழ்நாடு அரசு போக்குவரத்து ஊழியர்களுக்கு நடத்தினர். இதில் 20 பேர் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு பயனடைந்தனர்.






# பௌர்ணமி பல்லக்கு சேவை

திருப்பூர் 13.3.25 **75** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய பெரும் கிருபையால் மாத மாதம் நடைபெறும் சுவாமியின் பல்லக்கு சேவை முத்துநகர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சார்பில் மாசி மாதத்தில் (13 மார்ச் 2025) அன்று மாலை 6 மணிக்கு மிகவும் சிறப்பாகவும் ஆனந்தமாகவும் நடைபெற்றது.

# பள்ளி மாணவர்களுக்கு சிறப்புரை

திருப்பூர் 15.3.25 **400** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு தெய்வத்தின் பெரும் கருணையால், திருப்பூர் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திரு.நாகராஜ் அவர்கள், தி பிரெண்ட்லைன் அகாடமி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் நான்காம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் 400 மாணவர்களுக்கு "தொண்டு மற்றும் சேவை" என்னும் தலைப்பில் 15.03.25 அன்று காலை 11 மணிக்கு சிறப்புரை ஆற்றினர்.

# விளக்கு பூஜை

திருப்பூர் 20.3.25 **50** சேவாதளத்தொண்டர்கள்

நமது அன்பு தெய்வம் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா அவர்களுடைய பெருங்கருணையினால் மூன்றாவது விளக்கு பூஜை (3/108) பாரதிதாசன் நகரில் உள்ள ஸ்ரீ செல்வ விநாயகர் திருக்கோவிலில் (20.03.2025) சிறப்பாக நடைபெற்றது. விளக்கு பூஜையில் பங்கேற்றவர்கள் 28 பேர், சேவையில் பங்கேற்றவர்கள் 9 பேர் மற்றும் 13 குழந்தைகள் ஆக மொத்தம் 50 பேர் கலந்து கொண்டனர்.





# மகிளிர் தின விழா

திருப்பூர் 19.3.25 **40** சேவாதளத்தொண்டர்கள்

19.03.2025 புதன்கிழமை முற்பகல் 11.50 மணிக்கு நமது உடுமலை டி.வி.பட்டிணம் ஸ்ரீ சத்ய சாய் மந்திரில் மகளிர் தின விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் 40 மகிளாக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதில் ஓம்காரம் சாயி காயத்திரி, வரவேற்புரை கானாம்ருதம், இது நம்ம நேரம் போன்ற கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பின் மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு பிரசாதம் விநியோகித்து நிகழ்ச்சி சிறப்பாக நிறைவடைந்தது.





# குருமார்களுக்கான சாதனா முகாம்

திருப்பூர் 23.3.25 **40** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் 23.3.25 அன்று திருப்பூர் பி.என்.ரோடு ஸ்ரீ சத்ய சாய் ஆன்மீக மையத்தில், மாவட்டத்தில் உள்ள அனைத்து குருமார்களும் கலந்து கொள்ளும் வண்ணம் குருமார்களுக்கான சாதனா முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த சாதனா முகாமை திருப்பூர் மாவட்ட தலைவர் அவர்கள் வரவேற்புரையாற்றி தொடங்கி வைத்தார்கள்.

மாநில கல்வி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் திருமதி.ரமாதேவி அவர்கள் இணையவழி வாயிலாக குருமார்களிடம் பகவானின் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.பின்னர் பாலவிகாஸ் வகுப்பினை எவ்வாறு மேம்படுத்துவது, குருமார்களின் எண்ணிக்கை அதிகப்படுத்துவது, பகவானின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் பால விகாஸ் பிரிவின் பங்கு மற்றும் கோடைகால பயிற்சி முகாம் பகவானின் ஆராதனா மகோத்சவம் கொடைக்கானல் ஈஸ்வரம்மா தின நிகழ்ச்சிகள் ஆகியன குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டது.

இதில் 40க்கும் மேற்பட்ட குருமார்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சி அனைத்து குருமார்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.





# நாராயண சேவை

திருப்பூர் 31.3.25 38 சேவாதளத்தொண்டர்கள்

31.03.2025 அன்று நமது அன்பு தெய்வத்தின் பரிபூரண கிருபையால் காலையில் இடுவம்பாளையம் கருப்பராய திருக்கோயில் கும்பாபிஷேக விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக அழைப்பை ஏற்று திருப்பூர் சாய் சகோதர சகோதரிகள் நாராயண சேவையில் முழுமையாக பங்கெடுத்துக் கொண்டார்கள்.

கோயில் நிர்வாகத்தை சார்ந்தவர்களும் பொதுமக்களும் சேவையை மிகவும் பாராட்டி அனைவருக்கும் பிரசாதம் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். சேவையில் சாய் சகோதர, சகோதரிகள், பால விகாஸ், குழந்தைகள் என மொத்தம் 38 பேர் கலந்து கொண்டார்கள்.

# அலோபதி மருத்துவ முகாம்

திருப்பூர் 6.3.25 45 பயனாளிகள்

பகவானின் பெரும் கருணையால் ஒவ்வொரு வாரமும் வியாழக்கிழமை அன்று அலோபதி மருத்துவ முகாம் ஸ்ரீ சத்ய சாய் விகாரில் மதியம் 3 மணி முதல் 6 மணி வரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த மாதம் மொத்தம் 45 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.



# ஹோமியோபதி மருத்துவ முகாம்

திருப்பூர் 2.3.25 **226** பயனாளிகள்

பகவானின் பெரும் கருணையால் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை அன்று ஹோமியோபதி மருத்துவ முகாம் ஸ்ரீ சத்ய சாய் விகாரில் மதியம் 3 மணி முதல் 6 மணி வரை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த மாதம் மொத்தம் 226 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

## 108 இல்லங்களில் சாய் பஜன்

**தூத்துக்குடி** 21.3.25 **25** சேவாதளத்தொண்டர்கள்

நம் பகவானின் கருணையினால் 21.03.25 அன்று 43வது பஜன் கோவில்பட்டி டவுன் சமிதியில் நடத்தப்பட்டது. 25 சாய் பக்தர்கள் பங்கேற்றனர்.





# புதிய பஜனாமண்டலி தொடக்க விழா

தூத்துக்குடி 30.3.25 **70** சேவாதளத்தொண்டர்கள்

30.03.25 அன்று நம் பகவானின் அருட்பெரும் கருணையினால் தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சமிதியில் புதிய பஜனாமண்டலியும் பால விகாஸ் வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டன. குமார சக்கனாபுரம் கிராமத்தைச் சார்ந்த ஆண்கள்:10, மகிளாஸ்:20, இளைஞர்கள்:20, பெண்கள்:20 கலந்து கொண்டார்கள்.

# 100 வீடுகளில் பஜனை

தூத்துக்குடி 25.3.25 114 பயனாளிகள்

72 சேவாதளத்தொண்டர்கள்

நம் அன்பு ஸ்வாமியின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி டவுன் சமிதி சார்பாக 100 வீடுகளில் பஜனை நடைபெற்று வருகிறது. அதன் ஒரு நிகழ்வாக 25-03-2025 அன்று பாலவிகாஸ் மாணவர் வீட்டில் பஜனை நடைபெற்றது. இதில் சமிதி அன்பர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவர்களும் கலந்து கொண்டனர்.



# நாராயண சேவை

தேனி | 22.3.25 | 328 பயனாளிகள் | 29 சேவாதளத்தொண்டர்கள்

பெரியகுளம் ஸ்ரீ சத்ய சாயி பாபா சேவா சமிதியில் பிரதி மாதம் சனிக்கிழமையில் நாராயண சேவை நடைபெறுகிறது, இதில் ஒவ்வொரு வாரமும் எட்டு பேர் பயன் பெறுகின்றனர். இரண்டு ஆண் சேவாதள தொண்டர்கள் நாராயண சேவையை மேற்கொள்கின்றனர்.

பிறகு 22.03.2025 அன்று காமயன் கவுண்டன்பட்டி சமிதியின் சார்பாக கருமாரியம்மன் கோயில் திருவிழாவில் நாராயண சேவை மற்றும் தண்ணீர் பாட்டில் வழங்கப்பட்டன. ஐந்து ஆண் சேவாதள தொண்டர்களும், ஐந்து பெண் சேவாதள தொண்டர்களும் பங்கேற்றனர்.

300 பக்தர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது, 1500 தண்ணீர் பாட்டில்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன மற்றும் பூதிபுரம் சேவா சமிதியின் சார்பாக பிரதி மாதம் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் நாராயண சேவை நடைபெறுகிறது. இதில் 17 சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டனர். 20 நபர்கள் பயன்பெற்றனர்.

# 9வது கண் சிகிச்சை முகாம்

நாமக்கல் 23.3.25 **210** பயனாளிகள்

**25** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் அவதார நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 2025 மார்ச் 23ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை), நாமக்கல் மாவட்டத்தின் சார்பில், சேலம் அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, கொக்கராயன்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் 9 வது கண் சிகிச்சை முகாம் சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமில் இரண்டு மருத்துவர்கள், 12 செவிலியர்கள், ஒரு கண்காணிப்பாளர், 13 ஆண் சேவாதள்கள் மற்றும் ஐந்து மஹிளா சேவாதள்கள் என பலர் பங்கேற்றனர்.

மொத்தம் 210 பயனாளிகள் முகாமில் சிகிச்சைப் பெற்றனர். அவர்களில் 15 பேர் அறுவை சிகிச்சைக்காக பரிந்துரைக்கப்பட்டனர்.முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் (காலைச் சிற்றுண்டி, மதிய உணவு, முற்பகலில் தேநீர் வழங்கல் ஆகியவை) திருச்செங்கோடு மற்றும் பள்ளிப்பாளையம் சமிதிகள் சார்பாக பகவானின் அருளால் சிறப்பாக அர்ப்பணிப்பு உணர்வுடன் செய்யப்பட்டது. காலை 9 மணிக்கு வேதப்பாராயணமும், சாயி காயத்ரி பாராயணமும் மற்றும் "சத"நாமாவளி அர்ச்சனையுடன், இறை சிந்தனையுடனையுடன் முகாம் தொடங்கியது. பிற்பகலில் பஜனைப் பாடல்கள் பாடப்பட்டது. அனைவருக்கும் விபூதி மற்றும்

பிரசாதம் வழங்கப்பட்டது.

இறுதியில் மகா மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. இந்த அரிய சேவை வாய்ப்பினை அருளிய பகவானுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இதன் தொடர்ச்சியாக, 10 வது கண் சிகிச்சை முகாமை திருச்செங்கோடு, கொள்ளப்பட்டி காலனியில் நடத்த அனுமதி கோரப்பட்டுள்ளது.





# பொதுநல மருத்துவ ஆலோசனை முகாம்

கோயம்புத்தூர் 30.3.25

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் நூறாவது பிறந்த வருட வைபவத்தின் ஒரு பகுதியாக, 30.03.2025 அன்று காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை, கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில் உள்ள அன்னபூரணி பேட்டை சமிதி மற்றும் கோ ஆபரேட்டிவ் காலனி சமிதி ஆகிய இரண்டு சமிதிகள் இணைந்து இலவச பொதுநல மருத்துவ ஆலோசனை முகாமை மிகச் சிறப்பாக நடத்தின. இந்த முகாம், பி. எஸ். ஜி. மருத்துவமனையின் மருத்துவர்களின் ஒத்துழைப்புடன், ஸ்ரீ சாரதா பிரம்ம வித்யா கேந்திரா வளாகத்தில், தூரிப்பாலம் - கல்லார் பகுதியில் நடைபெற்றது.

முகாமில் 4 மருத்துவர்கள், 4 உதவியாளர்கள், 22 சேவாதாளர்கள் ஈடுபட்டு தங்களது நேரத்தையும் சேவையையும் அர்ப்பணித்தனர். மொத்தம் 118 பொதுமக்கள் இந்த முகாமின் பயனாளிகளாக இருந்தனர்.

# ஸ்ரீ ஐஸ்வர்ய கணபதி கோயில் மூன்றாம் ஆண்டு விழா

**கோயம்புத்தூர்** 6.3.25 **12** பயனாளிகள்

**12** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் அவதார நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, 06.03.2025 அன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை, மேட்டுப்பாளையம் வி.ஐ.பி நகர் ஸ்ரீ ஐஸ்வர்ய கணபதி கோயில் மூன்றாம் ஆண்டு விழாவில்," சிறப்பு சாயி பஜனை"நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் 4 மஹிளா சேவாதள்கள் மற்றும் 6 ஆண் சேவாதள்கள் கலந்துகொண்டனர்.



# மகா நாராயண சேவை

கோயம்புத்தூர் 13.3.25 **850** பயனாளிகள்

**25** சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் பெரும் கருணையினால் கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையம் அன்னபூரணி பேட்டை சமிதி, கூட்டுறவு காலனி சமிதி மற்றும் வீரபாண்டி பிரிவு சமிதி ஆகிய மூன்று சமிதிகளும் இணைந்து ஸ்வாமியின் அவதார நூற்றாண்டு கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 13.3.2025 அன்று காரமடை அருள்மிகு ஸ்ரீ ரங்கநாதர் ஸ்வாமி திருக்கோவிலின் திருத்தேர் திருவிழா நிகழ்ச்சிக்கு வந்திருந்த பக்தர்களுக்கு நாராயண சேவை வழங்கினர். இந்த மகா நாராயண சேவையில் சுமார் 850 பிரசாத பொட்டலங்கள் பக்தர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த சேவையில் மொத்தம் 25 சேவாதள தொண்டர்கள் கலந்து கொண்டனர். இதில் 19 ஆண்கள் மற்றும் 6 மகிலா தொண்டர்கள் கலந்து கொண்டு சேவை பணி ஆற்றினார்கள்.



# பிரபஞ்ச அமைதி சேவாசிரமம் விஜயம்

**கோயம்புத்தூர்** 9.3.25 **450** பயனாளிகள்

**65** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேராருளால் 09-03-2025 அன்று பிரபஞ்ச அமைதி சேவாசிரமத்திற்கு கணபதி சமிதியை சேர்ந்த 30 சாய் சகோதர சகோதரிகளும் சாய்பாபா சமிதியை சேர்த்த 35 சாய் சகோதர சகோதரிகளும் சென்றனர். வேதம், பஜனை மற்றும் கலை நிகழ்ச்சிகள் பாலவிகாஸ் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது.

ஆசிரம நிர்வாகிகள் மற்றும் அங்கு தங்கியுள்ள அனைவரும் சாயி அன்பர்களை அன்போடு வரவேற்று தேநீர் அளித்தனர். ஆசிரமத்தின் அன்றாட நிகழ்வு, மரங்கள் நிறைந்த அழகு வனம், 11 அடி ஆழ தியான மண்டபம், குழந்தைகள் விளையாட்டு பூங்கா, 9 விருக்ஷங்கள் இடம் ஆகியவற்றை கண்டு களித்தோம். ஆசிரமத்து குருஜி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மதிய உணவு வழங்கியமைக்கு அங்கு இருந்தவர்கள் சாயி அன்பர்களை வாழ்த்தி பாடியது கண்டு மனம் நெகிழ்ந்து விழிகள் ஈரம் ஆனது.

பகவானிடம் அவர்களுக்காக பிரார்த்தனை செய்து கொண்டு அனைவரும் அங்கு உணவு உண்டு மனநிறைவுடன் வீடு திரும்பினோம்.





# பாலவிகாஸ் பஜனை

தஞ்சாவூர் 22.3.25 40 பயனாளிகள்

40 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் ஒவ்வொரு மாதமும் நான்காவது சனிக்கிழமை பாலவிகாஸ் குழந்தைகளின் பஜனை கும்பகோணம் சமிதியில் நடைபெறுகிறது. இந்த மாதமும் பாலவிகாஸ் குழந்தைகளுக்கான பஜனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அனைத்து பாலவிகாஸ் மையங்களில் இருந்தும் குழந்தைகள் கலந்து கொண்டு மிகவும் ஆர்வமுடனும் உற்சாகமாகவும் சிறந்த முறையில் பாடுவதற்காக பயிற்சியும் செய்து நல்முறையில் பஜனைகளைப் பாடி மகிழ்ந்தனர்.





## பிரேமதரு

**தஞ்சாவூர்** 23.3.25 **9** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால், கும்பகோணம் சமிதி சார்பில் பிரேமதரு நிகழ்ச்சியின் கீழ் 25 மரக்கன்றுகள் நடப்பட்டன. 09 சேவாதளதொண்டர்கள் கலந்து கொண்டனர்.






# யுகாதி தின நிகழ்ச்சிகள்

தஞ்சாவூர் 30.3.25 35 சேவாதளத்தொண்டர்கள்

யுகாதி பண்டிகை 30-3-25 அன்று பகவானுடைய அருளால் ,காலை நகர சங்கீர்த்தனம் மாலையில் பஜனையும் சிறப்பாக நடைபெற்றன. 35க்கும் மேற்பட்ட சாயி பக்தர்கள் கலந்துகொண்டனர்.





# அருட்கஞ்சி விநியோகம்

தஞ்சாவூர் 29.3.25 **500** பயனாளிகள்

**15** சேவாதளத்தொண்டர்கள்

பகவானுடைய அருளால் மார்ச் 29 ஆம் தேதி மெஹர்னோன் புச்சாவடி சமிதியால் ஆர்.எம் மருத்துவமனை வளாகத்தில் அளிக்கப்பட்ட அருட்கஞ்சி மூலமாக 500 நோயாளிகள் பயனடைந்தனர் மற்றும் 15 சேவாதளத் தொண்டர்கள் பங்கேற்றனர்.



# இலவச கண் சிகிச்சை & மறுஆய்வு முகாம்

தஞ்சாவூர் 13.3.25 **56** பயனாளிகள்

**8** சேவாதளத்தொண்டர்கள்

பகவானுடைய அருளால் 13.03.2025 அன்று கண் மறு பரிசோதனை முகாம் இனிதே நடைபெற்றது 56 நோயாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர் முகாமில் கலந்து கொண்ட நோயாளிகள் 15 நபர்களுக்கு இலவச மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 8 சேவாதளத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# பகவானின் நூற்றாண்டு விழா - சிறப்பு ஸாயி காயத்ரி பாராயணம்

கன்னியாகுமரி | 6.3.25 | 22 பயனாளிகள் | 22 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெரும் கருணையுடன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா சமிதி சார்பில் பகவானின் நூற்றாண்டு விழாவிற்கான சிறப்பு நிகழ்ச்சிகளின் (Program SMS 2025) ஒரு பாகமாக 06-03-2025, 13-03-2015, 20-03-2025 மற்றும் 27-03-2025 ஆகிய நான்கு வியாழக்கிழமைகளிலும் பாலவிகாஸ் குழந்தைகளால் 21 முறை ஸாயி காயத்ரி பாராயணம் செய்யப்பட்டது.

மேலும் ஒவ்வோரு வியாழனும் ஒரு அஷ்டோத்திரத்தின் விளக்கம் பக்தியில் கோர்த்த நல்முத்துக்கள் புத்தகத்திலிருந்து பாலவிகாஸ் குரு ஸ்ரீதாராம் அவர்களால் குழந்தைகளுக்கு விவரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தவறாமல் 18 பாலவிகாஸ் குழந்தைகள் 02 பாலவிகாஸ் குருமார்கள் மற்றும் 02 மகளிர் கலந்து கொண்டனர்.





# பாலவிகாஸ் குழந்தைகளுக்கு வேத பயிற்சி

**கன்னியாகுமரி** 16.3.25 **19** பயனாளிகள்

**19** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெரும் கருணையால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ ஸத்ய ஸாயி சேவா சமிதி சார்பில் பகவானின் நூற்றாண்டு விழாவிற்கான சிறப்பு நிகழ்ச்சிகளின் (Program SMS 2025) ஒரு பகுதியாக பாலவிகாஸ் குழந்தைகளுக்கு வேத பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. 16-03-2025 மற்றும் 23-03-2025 ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மாவட்ட வேதம் ஒருங்கிணைப்பாளர் ஸாய் ராஜாராம் அவர்களால் பாலவிகாஸ் குழந்தைகளுக்கு மிகச் சிறப்பாக வேதப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிகளில் மொத்தமாக 12 பாலவிகாஸ் குழந்தைகள், 03 பாலவிகாஸ் குருக்கள் 02 மகளிர் மற்றும் 02 ஆடவர்கள் கலந்து கொண்டனர்.





# இலவச கண் பரிசோதனை முகாம்

கன்னியாகுமரி | 2.3.25 | 261 பயனாளிகள் | 26 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிறுவனங்களின் சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து, 02/03/2025 அன்று வடசேரியில் அமைந்துள்ள எஸ்.எம்.ஆர்.வி மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

முகாமிற்கான முதன்மை ஏற்பாடுகள் 01/03/2025 அன்று மாலை 03.00 மணி முதல் 06.00 மணி வரை மாவட்ட சாய் அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டது. 02/03/2025 அன்று காலை 8.30 மணிக்கு பஜனையுடன் சேவை நிகழ்ச்சி தொடங்கியது. 261 பயனாளிகள் பரிசோதிக்கப்பட்டனர். இதில் கண் அறுவை சிகிச்சைக்காக 97 பேர் தேர்வுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் அன்று மாலையே திருநெல்வேலி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது.

சேவையில் சத்ய சாயி அன்பர்கள் 26 பேர் கலந்து கொண்டனர். மேலும் அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. இறுதியாக மதியம் 2:30 மணியளவில் ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி நிறைவடைந்தது.





# ஸ்ரீ சத்ய சாய் புரத மாவு வழங்குதல்

கன்னியாகுமரி 13.3.25 **86** பயனாளிகள்

**5** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டம் ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனங்களின் சார்பில் ஒவ்வொரு மாதமும் இரண்டு தவணைகளாக ஸ்ரீ சத்ய சாய் புரத மாவானது தயாரிக்கப்பட்டு கஸ்தூரிபாய் நடுநிலை பள்ளி, தேரூர் (SSSVJ) குழந்தைகளுக்காக கொடுக்கப்படுகிறது. இம்மாதமும் குலசேகரன்புதூர் ஸ்ரீ சத்ய சாய் சேவா சமிதி சேவாதள்களால் கவனத்துடன் தயாரிக்கப்பட்ட மாவானது 13/03/2025, மற்றும் 21/03/2025 ஆகிய தேதிகளில் பள்ளி நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

# மாதாந்திர மஹிளா தினம்

கன்னியாகுமரி | 19.3.25 | 18 சேவாதளத்தொண்டர்கள்

பகவான் அவர்களின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் மற்றும் வல்லன்குமாரவிளை ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதிகளின் சார்பில் 19/03/2025 அன்று மாதாந்திர மஹிளா தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குலசேகரன்புதூர் சமிதி மகிளா அன்பர்களால் காலை 10 மணிக்கு ஓம்காரம், சாய் காயத்ரி பாராயணம் செய்தபின்பு குலசேகரன்புதூர் பிள்ளையார் கோவில் மற்றும் முத்தாரம்மன் கோவில் சுற்றுப்புறம் சுத்தம் செய்யப்பட்டது. பின்பு நண்பகல் 12.20 மணிக்கு ஆரத்தியுடன் சேவை நிகழ்ச்சி நிறைவடைந்தது.

இதுபோலவே வல்லன்குமாரவிளை சமிதியின் சார்பில் மகிளா அன்பர்களால் மாலை 6.30 மணிக்கு விளக்குபூஜை சிறப்பாக நடத்தப்பட்டது. ஓம்காரம், சாய் காயத்ரி பாராயணம் செய்தபின்பு விளக்குபூஜை தொடங்கியது.

இறுதியாக மாலை 08.30 மணியளவில் பகவானுக்கு ஆரத்தி அர்ப்பணிக்கபட்டதோடு நிகழ்ச்சி நிறைவடைந்தது. இச்சேவை மற்றும் ஆன்மீக நிகழ்ச்சியில் 16 மகளிர் மற்றும் 2 ஆண்கள் கலந்துகொண்டனர்.





# ருத்ர பாராயண பயிற்சி

**கன்னியாகுமரி** 16.03.2025 & 23.03.2025

**20** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெருங்கருணையினால் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த நாகர்கோவில் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பில் சாயி அன்பர்களுக்கு ருத்ர பாராயண பயிற்சி வழங்கப்பட்டது.

16/03/2025 மற்றும் 23/03/2025 இரண்டு ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 04.00 மணிக்கு மாவட்ட வேதம் ஒருங்கிணைப்பாளர் சாயி ராஜாராம் அவர்களால் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சாயி அன்பர்களுக்கு மிகச் சிறப்பாக ருத்ர பாராயண பயிற்சியளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளில் மொத்தமாக 02 பாலவிகாஸ் குழந்தைகள், 04 பாலவிகாஸ் குருக்கள், 06 மகளிர் மற்றும் 05 ஆண்கள் கலந்து கொண்டனர்.



# இல்லத்து சாயி பஜனை

**கன்னியாகுமரி** **32** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெரும் கருணையுடன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ ஸத்ய ஸாய் சேவா சமிதி சார்பில் திட்டமிட்டபடி சதாப்தி மகா மிருத்யுஞ்சய சாந்தி 2025 (பகவானின் 100 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு நடத்தப்படும் 100 சிறப்பு நிகழ்ச்சிகள்) திட்டத்தின் ஒரு பாகமாக ஸாய் அன்பர்களின் வீடுகளில் பஜனை ஏற்பாடு செய்யப்பட்டன.

07/03/2025 அன்று பாலவிகாஸ் குழந்தை ஸாய் சுகன்யா (குலசேகரன்புதூர்) அவர்களின் வீட்டிலும், 08/03/2025 அன்று ஸாய் பழனி (கன்னியாகுமரி) அவர்களின் வீட்டிலும், 15/03/2025 அன்று ஸாய் கலா (தேரூர்) அவர்களின் வீட்டிலும், 31/03/2025 ஸாய் ரமேஷன்பிள்ளை (குலசேகரன்புதூர்) அவர்களின் வீட்டிலும் மாலை 06.30 மணிக்கு பஜனை நிகழ்ச்சிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்ச்சிகளில் மொத்தமாக 23 பாலவிகாஸ் குழந்தைகள், 05 மகளிர் மற்றும் 04 ஆண்கள் கலந்து கொண்டனர்.





# யுகாதி தினக் கொண்டாட்டம்

கன்னியாகுமரி 30.3.25 21 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் தனிப்பெரும் கருணையுடன் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த குலசேகரன்புதூர் ஸ்ரீ ஸத்ய சாய் சேவா சமிதி சார்பில் 30/01/2025 அன்று யுகாதி மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 09.30 மணிக்கு ஸ்ரீ ஸத்ய சாய் பிரேம தரு திட்டத்தின் கீழ் 12 மரக்கன்றுகள் நடப்பட்டன. மேலும் மாலை 06.00 மணிக்கு சமிதியில் பஜனை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 04 பாலவிகாஸ் குழந்தைகள்,10 மகளிர் மற்றும் 02 ஆண்கள் கலந்து கொண்டனர்.



# இராமகதா ரஸவாஹினி பாராயணம்

காஞ்சிபுரம் வடக்கு 1.3.25 120 பயனாளிகள்

120 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு காஞ்சி வடக்கு மாவட்டத்தினை சேர்ந்த மகாலட்சுமி நகர் சமிதியின் சார்பாக ஸ்ரீ ராமகதா ரஸவாஹினி பாராயணம் நடத்தப்பட்டது. இதில் பாலவிகாஸ் குரூப் 2 மற்றும் குரூப் 3 மாணவர்கள் பங்கேற்று ஸ்ரீ ராமகதா ரஸவாஹினியை படித்தனர். ஒவ்வொரு சனிக்கிழமையும் பாலவிகாஸ் பிரிவுகளில் இந்த பாராயணம் நடத்தப்பட்டது, அங்கு மாணவர்களும் அவர்களது பெற்றோர்களும் ஸ்ரீ ராமகதா ரஸவாஹினி படிப்பதில் மிகவும் ஆர்வமுடனும் பக்தியுடனும் பங்கேற்றனர். இந்த நிகழ்வு இணையவழியிலும் பாலவிகாஸ் மையங்களிலும் நடந்தது.

## ஏகாதச ருத்ர பாராயணம்

**காஞ்சிபுரம் வடக்கு** 16.3.25 **100** பயனாளிகள் **70** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் காஞ்சி வடக்கு மாவட்டத்தை சேர்ந்த வி ஜி பி ராஜ கீழ்ப்பாக்கம் சமிதியின் சார்பாக கடந்த 11 மாதங்களாக 11 இடங்களில் ஏகாதச ருத்ர பாராயணம் நடத்தப் பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, 8 வது மாத நிகழ்ச்சி செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரர் அழகாம்பிகை திருக்கோவிலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பல பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டு ருத்ரம் பாராயணம் செய்தனர். பாலவிகாஸ் குரூப் 4 மாணவர்கள் அபிஷேக சேவையில் பங்கேற்றனர். கிராமத்தை சேர்ந்த பலரும் இதில் பங்கேற்று நிகழ்ச்சியின் பலன்களை பெற்றனர்.






# பெற்றோர் இணைப்பு திட்டம்

காஞ்சிபுரம் வடக்கு 16.3.25 **20** பயனாளிகள்

**20** சேவாதளத்தொண்டர்கள்

நங்கநல்லூர் பிரதான சாயி சமிதியில் பகவானின் 100 வது பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு மாதமும், மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில் பெற்றோர்களும் குருமார்களும் இணையும் நிகழ்ச்சி வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் 16 ம் தேதி யோகா கலை என்ற தலைப்பில் 10 பெற்றோர்கள், யோகாசனம், பிராணாயாமம், முத்திரைகள் மற்றும் உடல் பயிற்சிகள் செய்தனர். இந்நிகழ்ச்சி பெற்றோர்களின் திறமையை வெளிக்கொணர்வதுடன் நம் பகவானுடன் இணைக்கும் பாலமாக அமைகிறது.



# பிறந்தநாள் வாழ்த்து அட்டை வழங்குதல்

காஞ்சிபுரம் வடக்கு 5.3.25 **30** பயனாளிகள்

**15** சேவாதளத்தொண்டர்கள்

நங்கநல்லூர் பிரதான சமிதி பாலவிகாஸ் குழந்தைகளின் பிறந்தநாள் அன்று, குருமார்கள் அவர்களின் வீடுகளுக்கு சென்று பகவானின் வாழ்த்து அட்டையை வழங்கி, பஜனைகள் பாடி குழந்தைகளை மகிழ்வித்து வாழ்த்தி வருகின்றனர். ஒவ்வொரு மாதமும் பிறந்தநாள் வாழ்த்து அட்டை வழங்கும் நிகழ்ச்சி விமர்சையாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் குழந்தைகளுக்கும் குருமார்களுக்கும் உள்ள அன்பு பலப்படுவதோடு அவர்கள் இல்லம் நாடி செல்வதால் அவர்கள் பெற்றோர்களுக்கும் நம் சாயி சமிதிக்கும் பாலமாக அமைகிறது.



# பாலவிகாஸ் பஜன்

**காஞ்சிபுரம் வடக்கு** 29.3.25 **80** பயனாளிகள்

**61** சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட பாலவிகாஸ் மாணவர்கள் சென்னை சுந்தரத்தில் மாதத்தின் 5வது சனிக்கிழமை பஜனைகளை வழங்குகிறார்கள். அவ்வாறே, கடந்த 29-03-2025 அன்று வேதம் ஓதுதலுடன் பஜனை தொடங்கியது. அனைத்து பாலவிகாஸ் குழந்தைகளும் பெற்றோரும் பகவானின் அறையை தரிசனம் செய்யும் வாய்ப்பைப் பெற்றனர். பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை: பெண்கள்: 27 சிறுவர்கள்: 13. பெற்றோர்/குருக்கள்: 20. ஆண்கள் பெற்றோர் & சேவையாளர்கள்: 04. காஞ்சிபுரம் வடக்கிலிருந்து பங்கேற்ற சமிதிகளின் எண்ணிக்கை: 8



# மஹா நாரயண சேவை

காஞ்சிபுரம் வடக்கு 9.3.25 250 பயனாளிகள்

15 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண அனுகிரஹத்துடன் மாதந்தோறும் ஏதேனும் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் பம்மல் சமிதியில் உள்ள அனைத்து சாயி அன்பர்களும் பாலவிகாஸ் பெற்றோரும் தங்களால் முடிந்த பொருட்களை தாமாக முன்வந்து வழங்கி, நமது சமிதி இளைஞர்கள் மற்றும் பாலவிகாஸ் பெற்றோரும் இணைந்து சாயி நாமத்துடன் காய்கறிகள் நறுக்கி மகாநாரயண சேவையாக தக்காளி சாதமும் தயிர் சாதமும் சமைத்து அருகில் உள்ள நரிகுறவர்களுக்கும், தங்க இடம் கூட இல்லாத ஏழை எளிய மக்களுக்கும் சுமார் 275 உணவு பொட்டலங்கள் வழங்கும் சேவை செய்து நமது சுவாமியின் ஆசிர்வாதத்தை பெறுகின்றனர்.





# கோயில் பஜனை – சங்கர் நகர் விநாயகர் திருக்கோயில்

காஞ்சிபுரம் வடக்கு | 15.3.25 | 15 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பரிபூரண அருளும் தெய்வீக ஆசீர்வாதத்துடன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பம்மல் சமிதியின் சார்பாக, ஒவ்வொரு மாதத்திலும் ஒரு சனிக்கிழமை மாலை, சாய் பஜனை நடைபெற்றுவருகிறது. இதில் மாதந்தோறும் சாய் மகிளாக்களும் பாலவிகாஸ் மாணவிகளும் ஆர்வமுடன் பங்கேற்று, தெய்வீக அருளைப் பெறுவதற்கான பாக்கியத்தை அனுபவிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.





# பகவானின் அவதார நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் - சீதா ராமா கல்யாண மஹோத்சவம்

காஞ்சிபுரம் வடக்கு | 30.3.25 | 758 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அவதார நூற்றாண்டு விழா வைபவ நிகழ்ச்சிகளில் ஒன்றான, காஞ்சிபுரம் [வடக்கு] மாவட்டம், சிட்லபாக்கம் சமிதி மற்றும் குரோம்பேட்டை சமிதி இணைந்து, ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு, 29மார்ச் முதல் 6ஏப்ரல் (9 நாட்கள்) வரை, சீதா ராம கல்யாண மஹோத்சத்தை கோலாகலமாகவும் மிகவும் விமர்சையாகவும் நடத்தியது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டத்தில் உள்ள சமிதி அங்கத்தினர்களும், பால விகாஸ் குழந்தைகளும் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

29th மார்ச் 2025 அன்று சீதா தேவி ஸ்ரீ ராமர், சிட்லபாக்கம் சமிதிக்கு வருகை புரிந்ததையொட்டி, அன்று சிறப்பு பஜனை நடந்தது.

30th மார்ச் அன்று காலை வேத கோஷம் மற்றும் பஜனை பாடல்களுடன் சிட்லபாக்கம் மற்றும் குரோம்பேட்டை சமிதி அன்பர்கள் சீதா தேவி ஸ்ரீ ராமர் அவர்களை பூரண கும்ப

மரியாதையுடன் திரு வீதி உலாவாக ஸ்ரீ ராம் கணேஷ் திருமண மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். அங்கு சீதா தேவி ஸ்ரீ ராமர் திருகல்யாண வைபோகம், குறித்த சுப முகூர்த்தத்தில் (8 மணியிலுருந்து 10.30 மணிக்குள்), மங்கள ஹாரத்தியுடனும் கல்யாண ப்ரசாதத்துடனும் இனிதே நடைபெற்றது. அனைவரும் பகவானின் பரிபூரண அருள் கிடைக்கப்பெற்றனர். மாலை 5 மணியிலிருந்து சாய் பஞ்சரத்ன கீர்த்தனை மற்றும் ஆஞ்சநேயர் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

31st மார்ச் முதல் 6th ஏப்ரல் வரையிலான அனைத்து நிகழ்ச்சிகளும் குரோம்பேட்டை சமிதியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.





# முதியோர் இல்லத்தில் பாலவிகாஸ் குழந்தைகள்

காஞ்சிபுரம் தெற்கு 23.3.25 **70** பயனாளிகள்

**30** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசிர்வாதத்தால் தெலுங்கு வருடப்பிறப்பை முன்னிட்டு கலெக்டரேட் சமிதியின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் ஒரு பகுதியாக அன்னையர் இல்லம் என்னும் முதியோர் இல்லத்தில் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பாலவிகாஸ் குழந்தைகளின் சாய் பஜன், ஸ்லோகங்கள் சொல்லுதல், திருவாசகம், பகவான் அருளிய நீதி கதைகள் சொல்லுதல் மற்றும் கண்ணப்ப நாயனார் நாடகம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அங்கு தங்கியிருந்த முதியவர்கள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியுற்றனர்.

பின்னர் நாராயண சேவை 60 பேருக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் பாலவிகாஸ் குழந்தைகள் 12 மாணவர்கள், 6 மாணவிகள், சாயி அன்பர்கள் 4 ஆண்கள், 8 பெண்கள் என மொத்தம் 30 பேர் கலந்து கொண்டனர்.





# பள்ளி பாலவிகாஸ் திட்டத்தின்படி பயின்ற பிரிவு 2 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி

காஞ்சிபுரம் தெற்கு | 24.3.25 | 30 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

காஞ்சி தெற்கு மாவட்டத்தை சேர்ந்த தாம்பரம் சமிதி சார்பாக பள்ளி பாலவிகாஸ் திட்டத்தின்படி பயின்ற பாலவிகாஸ் பிரிவு 2 மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் தலைமை ஆசிரியர் அனுமதி பெற்று பள்ளியில் வழங்கப்பட்டன. பகவானின் பேரருளால் ரமண வித்யாஷ்ரம் பள்ளியில் பயிலும் 10வது பொதுத்தேர்வு எழுதும் மாணவர்கள் சிறப்பாக வெற்றிபெற ஸாயி காயத்ரியுடன் பிரார்த்தனை செய்யப்பட்டது. மாணவ மாணவிகளுக்கு பேனா மற்றும் பென்சில் செட் வழங்கப்பட்டது. பிறகு பள்ளியில் பிரிவு 1,2 மற்றும் 3 மாணவ மாணவிகளுக்கு பாலவிகாஸ் வகுப்புகள் நடைபெற்றன.

# இலவச கண் சிகிச்சை முகாம்

காஞ்சிபுரம் தெற்கு | 30.3.25 | 40 பயனாளிகள் | 12 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் ஆசியுடன் செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக, பம்மல் சங்கரா கண் மருத்துவமனை, மூலமாக இலவச கண் சிகிச்சை முகாம் 30/03/2025 அன்று ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதி செங்கல்பட்டில் நடைபெற்றது.

இதில் மொத்தம் 31 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். இதில் கண் புரை அறுவை சிகிச்சைக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16 ஆகும். இந்நிகழ்வில் பங்கேற்ற சேவாதளத் தொண்டர்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

முகாமில் பங்கேற்ற அனைவருக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. நாராயண சேவையில் மொத்தம் 7 குடும்பங்கள் பங்கேற்று பகவானுக்குத் தொண்டு புரிந்தனர். நாராயண சேவை 40 பேருக்கு செய்யப்பட்டது.



REDMI 13C 5G
30/03/2025 11:17




REDMI

# இலவச பொது மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு 2.3.25 116 பயனாளிகள்

30 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் தங்களின் சமிதிகளைச் சுற்றியுள்ளோருக்கு இலவச பொது மருத்துவ முகாம்களை மாதந்தோறும் நடத்தி வருகின்றது. கடந்த மார்ச் மாதத்தில் பார்வதி நகர் சேவா சமிதி, மண்ணிவாக்கம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பொது மருத்துவ முகாம்களை நடத்தி பகவானுக்குத் தொண்டாற்றின.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக கரசங்கால் கிராமத்தில் பொது மருத்துவ முகாம் 09/03/2025 அன்று நடைபெற்றது. இதில் சாய் அன்பர்கள் மற்றும் மருத்துவர்கள் அன்புடனும் ஆர்வத்துடனும் பங்கேற்று மக்களுக்குத் தொண்டாற்றினர். இம்முகாமில் இரத்த அழுத்தம் கண்டறிதல் மற்றும் நீரிழிவு நோயாளிகளுக்கு சர்க்கரை அளவுகளை கண்டறிதல், அவர்களின் உடல் எடை கண்டறிதல் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்பட்டு அதற்கு உரிய மருந்து மாத்திரைகள் நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

கலந்து கொண்ட அனைத்து நபர்களுக்கும் நாராயண சேவை வழங்கப்பட்டது. 40 கிராம பொது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த மகத்துவமான சாயி சேவையில் சமிதி

அங்கத்தினர்கள் 10 பேர் கலந்து கொண்டு பகவானின் ஆசீர்வாதம் பெற்றனர்.

மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக 02/03/2025, 09/03/2025, 16/03/2025 மற்றும் 23/03/2025 ஆகிய தினங்களில் மண்ணிவாக்கம் சமிதியில் இலவச மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. இதில் தலை சிறந்த மருத்துவரான டாக்டர். சேஷகிரி நெஞ்சக நோய் நிபுணர் - ஓய்வுபெற்ற அரசு மருத்துவர் மற்றும் டாக்டர் செல்வி மனிஷா ஆகியோர் பங்கேற்று முகாமிற்கு வருகை தந்த 76 நோயாளிகளுக்கு சிறந்த முறையில் சிகிச்சை அளித்தனர்.

இதில் சுமார் 11 பேருக்கு இரத்த பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது. நோயாளிகளுக்கு மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த சேவையில் சராசரியாக மண்ணிவாக்கம் சேவா சமிதியின் 5 சாயி அன்பர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், சேவை மனப்பான்மையுடனும் ஒவ்வொரு முகாமிலும் பங்கேற்று பகவானுக்குத் தொண்டாற்றினர்.





# இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்

**காஞ்சிபுரம் தெற்கு** 354 சேவாதளத்தொண்டர்கள்

நமது இதயத்தில் என்றும் வாசம்செய்யும் நமது பகவானின் அருளுடன். காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் ஒவ்வொரு மாதமும் "இல்லத்திலும் உள்ளத்திலும் சாயி நாமம்" என்ற திட்டத்தின் கீழ், தங்கள் சமிதியைச் சார்ந்த அங்கத்தினர்களின் இல்லங்களிலோ, முதியோர் இல்லங்களிலோ, அல்லது மற்றவர்களின் இல்லங்களிலோ வேத பாராயணம், பஜனை ஆகியவற்றை மேற்கொண்டு, சாயி நாமத்தைப் பலரின் உள்ளங்களில் அவனருளாலே நிலைநாட்டி, அவர்களை ஆத்ம திருப்தி அடையச்செய்கின்றன.

அந்த வகையில் கடந்த மார்ச் மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் கலந்துகொண்டு பகவானுக்குத் தொண்டாற்றின.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 01/03/2025, 08/03/2025, 15/03/2025, 17/03/2025, 22/03/2025, 27/03/2025, மற்றும் 29/03/2025 ஆகிய தினங்களில் பக்தர்களின் இல்லங்களில் சிறப்பு பஜனை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இதில், சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் திரளாக பங்கேற்றனர். அதுமட்டுமல்லாது 27/03/2025 அன்று 10 ஆம் வகுப்பு தேர்வு எழுதும் பாலவிகாஸ் மாணவர்கள் நன்கு

தேர்ச்சி பெற சிறப்பு பிரார்த்தனை மற்றும் பஜனை பாலவிகாஸ் குரு ஸ்ரீமதி. ராஜலக்ஷ்மி சாய்ராம் அவர்கள் இல்லத்தில் நடத்தப்பட்டது. இதில் சமிதியின் ஒருங்கிணைப்பாளர் திரு பாலசுப்ரமணியன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக, தாம்பரம் சமிதியின் உறுப்பினர்கள், தங்கள் சமிதி உறுப்பினர்களின் இல்லங்களுக்கு வாரந்தோறும் சனிக்கிழமைகளில் சென்று அவ்வில்லத்தாருடன் இணைந்து ருத்ர பாராயணம் செய்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். பாராயணம் முடிந்த பிறகு, பகவான் பாபாவிற்கு மங்கள ஆரத்தி காட்டப்பட்டு நிகழ்ச்சி நிறைவு பெறுகிறது. அந்த வகையில் கடந்த மாதம் 01/03/2025, 08/03/2025, 15/03/2025 22/03/2025 மற்றும் 29/03/2025 ஆகிய நாட்களில் ருத்ர பாராயணம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தாம்பரம் சமிதியின் அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் குழந்தைகள் கலந்து கொண்டனர். இதுவரை பகவானின் பேரருளால் 88 இடங்களில் (பக்தர்களின் இல்லங்கள் மற்றும் பொது இடங்கள்) இந்நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக மாதத்தின் அனைத்து வெள்ளிக்கிழமைகள் மற்றும் சனிக்கிழமைகளில் பக்தர்களின் இல்லங்களில் ருத்ர பாராயணமும், பஜனையும் நடைபெறுகின்றன. இதில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் பாலவிகாஸ் மாணவச்செல்வங்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.



# உழவாரப்பணி

காஞ்சிபுரம் தெற்கு | 9.3.25 | **34** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தங்கள் சமிதியைச் சுற்றியுள்ள ஆலயங்களை சுத்தம் செய்து பொது மக்களுக்கும், பகவானுக்கும் சேவை செய்து வருகின்றன. அந்த வகையில் கடந்த மார்ச் மாதத்தில் பெருங்களத்தூர் சேவா சமிதி, ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் பங்கேற்றன.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக 09/03/2025 அன்று புதுப்பெருங்களத்தூர், ஆர்.எம்.கே. நகரில் உள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோவிலில் உழவாரப்பணி நடைபெற்றது. இதில் 21 சமிதி அங்கத்தினர்களும், 7 பாலவிகாஸ் மாணவச்செல்வங்களும் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 06/03/2025 அன்று ஸ்ரீபெரும்புதூருக்கு அருகிலுள்ள மாம்பாக்கத்தில் அமைந்துள்ள அருள்மிகு பொன்னியம்மன் திருக்கோவிலில், உழவாரப்பணி நடைபெற்றது. இதில் மகிளா சேவாதளத் தொண்டர்கள் 6 பேர் கலந்துகொண்டு பகவானுக்கு தொண்டாற்றினர்.



## கோ பூஜை

காஞ்சிபுரம் தெற்கு 13.3.25 **60** பயனாளிகள்

**8** சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவானின் அருளால், மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக 13/03/2025 அன்று, ஆத்தூர் வேத பாடசாலையில் கோ பூஜை நடைபெற்றது. பின்பு அங்குள்ள 60 பசுக்களுக்கு அகத்திக்கீரை வழங்கப்பட்டது. மொத்தம் பங்குகொண்ட சேவதளர்களின் எண்ணிக்கை 8.





Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மார்ச்
2025

## சாயி புரத சத்து மாவு வழங்கும் சேவை

காஞ்சிபுரம் தெற்கு

392 பயனாளிகள்

30 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசியுடனும், "ஸ்வாமியின் அன்பு 1000 அன்னையர்களின் அன்பிற்குச் சமம்", என்ற கூற்றிற்கேற்பவும் ஒவ்வொரு மாதமும் தேகபலத்தையும் மனபலத்தையும் தந்திடும் சாயி புரதச் சத்து மாவானது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகளால், தேவைப்படுவோருக்கு தானமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த மார்ச் மாதத்தில் ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, ஆகிய சமிதிகள், இந்தப் புனிதமான சேவையில் பங்கேற்று பகவானுக்கு மகிழ்ச்சி அளித்தன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தயானந்த சரஸ்வதி கிருபா இல்லம் என்ற அமைப்பிற்கு 17/03/2025 அன்று நமது ஸ்வாமியின் கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் தயாரித்தளித்த 30 கிலோ சாயி புரதச் சத்து மாவை, ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் அந்த விடுதியின் காப்பாளரிடம் வழங்கினர். இதில் ஸ்ரீபெரும்புதூர் சமிதி அங்கத்தினர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்று நமது பகவானின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்துக்கொண்டனர்.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக தாம்பரம் சமிதி மகளிர் குழு

14/03/2025 அன்று குரோம்பேட்டையில் உள்ள பொது மருத்துவமனைக்குச் சென்று அங்கு உள்ள கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் என 125 பேருக்கு சாய் புரதச் சத்து மாவை விநியோகம் செய்தனர். அத்துடன் சேர்த்து 100 சானிட்டரி நாப்கின் பட்டைகளும் விநியோகம் செய்யப்பட்டன. சாய் புரதச் சத்து மாவு அனந்தபூர் கல்லூரியின் முன்னாள் மாணவிகளின் பொருளாதார உதவியுடன் தயார் செய்யப்பட்டது. அதுமட்டுமல்லாது 19/03/2025 அன்று மாதாந்திர மகிளா தினத்தை முன்னிட்டு அதே மருத்துவமனையில் 125 பேருக்கு சாயி புரத சத்து மாவு பொட்டலங்கள் விநியோகிக்கப்பட்டன.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக, சமிதியின் அங்கத்தினர்கள் தாமாகவே சாய் புரதச் சத்து மாவிற்கான மூலப்பொருட்களை தரமான முறையில் கொள்முதல் செய்து, அதனை சுத்தமான முறையில் வறுத்தரைத்து, நன்கு ஆறவைத்து, கலந்து, அதனைப் பொட்டலங்களாகக்கட்டி, 15/03/2025 அன்று செங்கல்பட்டு அரசு மருத்துவமனையிலும், தாம்பரம் சானடோரியம் காசநோய் மருத்துவமனையிலும், சுமார் 110 பேருக்கு சாய் புரதச் சத்து மாவு பொட்டலங்களை இலவசமாக வழங்கினர். இதில் பெருங்களத்தூர் சேவா சமிதி அங்கத்தினர்கள் தங்களை மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொண்டனர்.

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மார்ச் 2025

Love All, Serve All
Help Ever, Hurt Never






## சிறப்பு நாராயண சேவை

காஞ்சிபுரம் தெற்கு

137 பயனாளிகள்

23 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கு நாராயண சேவை செய்துவருகின்றனர். "மானவ சேவையே மாதவ சேவை" என்ற கூற்றிற்கிணங்க சமுதாயத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு நமது சாயி அன்பர்கள் உணவளித்து பகவானுக்கு தொண்டாற்றிவருகின்றனர். அந்த வகையில் கடந்த மார்ச் மாதத்தில், மறைமலை நகர் சேவா சமிதி, ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 15/03/2025 அன்று ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஸ்ரீமத் ராமானுஜர் திருக்கோவிலின் முன்பு ஒரு சிறப்பு நாராயண சேவை நடைபெற்றது. இந்நிகழ்வில் 13 மகளிர் தங்கள் இல்லங்களில் நாராயண சேவைக்கு தேவையான உணவை சமைத்து, பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பின் நாராயண சேவை செய்யப்பட்ட்டது. இச்சேவையின் மூலம் சுமார் 53 பேர் பயனடைந்தனர். இச்சேவையில் பங்கேற்ற மகளிருள் பெரும்பாலானோர், சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகளின் பெற்றோர் ஆவர். மற்றும் பாலவிகாஸ் முதலாம் பிரிவு மாணவச்செல்வங்கள் 5 பேர் நேரடியாக நாராயண சேவை

செய்தது குறிப்பிடத்தக்கது.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, வரவிருக்கும் நமது பகவானின் 100வது பிறந்தநாளை முன்னிட்டு 09/03/2025, 15/03/2025, 23/03/2025, 29/03/2025 தினங்களில் மறைமலை நகரைச் சுற்றியுள்ள இடங்களில் நாராயண சேவை நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் சமிதி அங்கத்தினர்கள், ஸ்ரீ சத்ய சாயி திறன் மேம்பாட்டு மைய மாணவச்செல்வங்கள் ஆகியோர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர். இதற்கு முன்னதாக சமிதியினால் ஏற்படுத்தப்பட்ட இல்லத்து பஜனையில் பங்கேற்ற இல்லாத்தார்கள், இந்த நாராயண சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டது குறிப்பிடத்தக்கது.





# ஸ்ரீ சத்ய சாயி அமிர்த கலசம் விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு 2.3.25 27 பயனாளிகள்

7 சேவாதளத்தொண்டர்கள்

நமது பிரியமான பகவானின் பேரன்பு கலந்த நல்லாசிகளுடன், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் உள்ள சமிதிகள் ஒவ்வொரு மாதமும் தங்களின் சமிதியைச் சுற்றியுள்ளோருக்கும், தங்களின் சமிதியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கும் சென்று அங்குள்ளோருக்கு, நமது பகவானால் தொடங்கி வைக்கப்பட்ட "அமிர்த கலசம்" என்னும் பகவானின் பிரசாதத்தை இலவசமாக வழங்கி வருகின்றன. இந்த அமிர்த கலசத்தில் ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்களும், குளியல் பொருட்களும் அடங்கி உள்ளன. கடந்த மார்ச் மாதத்தில், ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதி, மறைமலை நகர் சேவா சமிதி ஆகிய சமிதிகள் இந்த சேவையில் ஈடுபட்டன.

ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் சார்பாக 03/03/2025 அன்று ஸ்ரீபெரும்புதூர் சேவா சமிதியின் தத்து கிராமமான நந்திமேடில் மிகுந்த தேவையுள்ள ஒரு குடும்பத்திற்கு 1 அமிர்த கலசம் வழங்கப்பட்டது.

மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 02/03/2025 அன்று மறைமலை நகர் சமிதியைச் சுற்றியுள்ள 9 குடும்பங்களுக்கு அமிர்த கலசங்கள் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்லாது சுமார் 25

பேருக்கு நாராயண சேவை நடைபெற்றது.



# தெலுங்கு வருட பிறப்பு

காஞ்சிபுரம் தெற்கு | 30.3.25 | 143 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட சமிதிகள் தெலுங்கு வருட பிறப்பு தினமான யுகாதி தினத்தை 30/03/2025 அன்று வெகு சிறப்பாக கொண்டாடின. இதில் மண்ணிவாக்கம் சேவா சமிதி, செங்கல்பட்டு சேவா சமிதி, பார்வதி நகர் சேவா சமிதி, தாம்பரம் சேவா சமிதி, பெருங்களத்தூர் சேவா சமிதி, ஆகிய சமிதிகள் பங்கேற்றன.

மண்ணிவாக்கம் சேவா சமிதியின் சார்பாக மாலையில் சிறப்பு பஜனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஓர் சிறப்பு வாசகர் வட்டம் நடைபெற்றது. இதில் சமிதி அங்கத்தினர்கள் மற்றும் கிராம பொது மக்கள் கலந்துகொண்டு பகவானின் சிந்தனையில் ஆழ்ந்தனர். அதுமட்டுமல்லாது சமிதியில் நடைபெறவிருக்கும் ஆன்மீக மற்றும் சேவை நிகழ்வுகளில் பங்குகொள்வதைப் பற்றியும், அந்நிகழ்வுகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

செங்கல்பட்டு சேவா சமிதியின் சார்பாக மாலையில் பகவானுக்கு சிறப்பு ஊஞ்சல் சேவை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து சிறப்பு பஜனையும், மங்கள ஆரத்தியும் பகவானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

பார்வதி நகர் சேவா சமிதியின் சார்பாக மாலையில் சாய்

அன்பர்கள் வேத பாராயணம் செய்தனர். பின்னர், சிறப்பு பஜனை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பாலவிகாஸ் மாணவர்களின் இசை கச்சேரி நடைபெற்றது. இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுபெற்றது.

தாம்பரம் சேவா சமிதியின் சார்பாக காலை 5.15 மணி முதல் 6.30 மணி வரை ஓம்காரம், சுப்ரபாதம், நகரசங்கீர்த்தனம், ஆகியன சமிதியில் நடைபெற்றன. பிறகு காலை 6.30 மணிக்கு பிரசாந்தி கொடியேற்றம் மிகச் சிறப்பாக நடந்தது. அன்று மாலை 5.30 மணிக்கு வேதம் மற்றும் பஜனை சமிதியில் நடைபெற்றன. மேலும் கடைசி ஞாயிற்றுக்கிழமை என்பதால் பாலவிகாஸ் மாணவர்களால் பாலவிகாஸ் பஜனை நடைபெற்றது. இறுதியில் பாலவிகாஸ் குழந்தைகள் பகவானுக்கு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

பெருங்களத்தூர் சேவா சமிதியின் சார்பாக காலையில் ஓம்காரம், சுப்ரபாதம், மற்றும் அதனைத் தொடர்ந்து நகர்சங்கீர்த்தனம் நடைபெற்றன. பின்னர் பிரசாந்தி கொடியேற்றத்துடன் காலை நிகழ்ச்சி முடிவடைந்தது. மாலை 6.00 மணி முதல் 7.00 மணி வரை சிறப்பு பஜனை நடத்தப்பட்டது. இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி எடுக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுபெற்றது.





# நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் கண் மருத்துவ முகாம்.

காஞ்சிபுரம் தெற்கு | 16.3.25 | 138 பயனாளிகள்

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தின் சார்பில் மாதாந்திர இலவச நடமாடும் மருத்துவ முகாம் மற்றும் இலவச கண் மருத்துவ முகாம் வழக்கம் போல், மார்ச் மாதம் 16 ஆம் நாள் தாம்பரம் சமிதியின் தத்து கிராமமான ஆரம்பாக்கம் என்னும் கிராமத்தில் ஸாயி கார்டன்ஸ் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இம் முகாமிற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் தாம்பரம் சமிதியின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் சமிதி உறுப்பினர்கள் ஆகியோர் ஒன்றிணைந்து சிறப்புற செய்திருந்தனர்.

நடமாடும் மருத்துவ முகாமின் இயக்குனரும் மருத்துவருமான திரு நாகராஜு ஸாயிராம் அவர்களின் தலைமையில் கீழ்கண்ட மருத்துவ வல்லுனர்கள் குழு முகாமிற்கு வந்திருந்த அனைத்து பயனாளிகளையும் அன்புடன் பரிசோதித்து தேவையான மருந்துகளை பரிந்துரைத்தனர். அவர்கள் அனைவருக்கும் ஒரு மாதத்திற்குத் தேவையான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன.

கலந்து கொண்ட மருத்துவ குழுவினர் :
1. மரு. திரு சேஷகிரி ஸாயிராம் அவர்கள், நெஞ்சக நோய் நிபுணர், 2. மரு. திரு அஷ்வின் ஸாயிராம் அவர்கள். பொது மருத்துவர், 3. மரு. திரு யோகேஷ்வரன் ஸாயிராம் அவர்கள், பல்

மருத்துவர்.

இவர்களுக்கு உதவியாக பார்வை மருத்துவ உதவியாளர், ஊடுகதிர் தொழில் நுட்ப வல்லுனர், இ.சி.ஜி தொழில் நுட்ப வல்லுனர் ஆய்வக உதவியாளர், யோகப் பயிற்சி வல்லுனர் ஆகியோரும் முகாமில் கலந்து கொண்டனர். இம் முகாமில் 138 பயனாளிகள் கலந்து கொண்டனர். இவர்களில் கண் பரிசோதனை செய்து கொண்டவர்கள் 42 பேர்.இவர்களில் கண் புரை அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 12 பேர். இவர்கள் அனைவரும் அறுவை சிகிச்சைக்காக பம்மல் சங்கரா கண் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். ஆய்வக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் 152 பேர். பல் பரிசோதனை செய்துகொண்டோர் 15 பேர்.

யோகா பயிற்றுனர் திருமதி ஆண்டாள் ஸாயிராம் அவர்கள் 5 பயனாளிகளுக்கு யோகப் பயிற்சியினைக் கற்றுக் கொடுத்தார். இம்முகாமில் ஊடுகதிர் பரிசோதனை 4 பயனாளிகளுக்கும் இ.சி ஜி பரிசோதனை 12 பயனாளிகளுக்கும் நடத்தப்பட்டது. ஸாயி புரதச்சத்து மாவு 50 தகுதியான பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. வந்திருந்த அனைவருக்கும் காலை உணவு நண்பகல் உணவு மற்றும் தேனீர் ஆகியன வழங்கப்பட்டன. இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி காட்டப்பட முகாம் இனிதே நிறைவெய்தியது.

# மறுபயன்பாட்டு சானிட்டரி நாப்கின் பட்டைகள் விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு | 16.3.25 | 100 பயனாளிகள் | 5 சேவாதளத்தொண்டர்கள்

நமது பகவான் பாபாவின் ஆசியுடன் 16/03/2025 அன்று , ஆரம்பாக்கம் சாய் கார்டன்ஸ் ஸ்ரீ சத்ய சாய் நடமாடும் மருத்துவ முகாமில், பள்ளி மாணவிகள், கல்லூரி மாணவிகள், இளம் தாய்மார்கள் மற்றும் இளம் மகிளாக்களுக்கு சமூக பொறுப்புணர்வு திட்டத்தின் கீழ் 300 மறுபயன்பாட்டு சானிட்டரி நாப்கின் பட்டைகள் வழங்கப்பட்டன. 100 பேர் பயனடைந்தனர். பயனாளிகளுக்கு திருமதி பிரேமா சாய்ராம் மற்றும் தாம்பரம் சமிதி கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி சந்தானலட்சுமி சாய்ராம், ஆகியோரால் பயன்பாட்டு வழிமுறைகள் எடுத்துரைக்கப்பட்டன.



# சிறப்பு பொது மருத்துவ மற்றும் பல் மருத்துவ முகாம்

காஞ்சிபுரம் தெற்கு 23.3.25 60 பயனாளிகள்

26 சேவாதளத்தொண்டர்கள்

ஸ்வாமியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஸ்வாமியின் தெய்வீக ஆசீர்வாதங்களுடன் தாம்பரம் சமிதியின் சார்பாக , 23.03.2025 அன்று மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை சிறப்பு பொது மருத்துவ முகாம் சங்கரா முதியோர் பராமரிப்பு மையம் குரோம்பேட்டையில் நடத்தப்பட்டது. இதில் 60 முதியவர்கள் பயனடைந்தனர்.

மற்றும் 24.03.2025 அன்று காலை 11.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை பல் பரிசோதனை முகாம் சங்கரா முதியோர் பராமரிப்பு மையம் குரோம்பேட்டையில் நடத்தப்பட்டது. இதில் 60 முதியவர்கள் பயனடைந்தனர். பல் மருத்துவர் டாக்டர் யோகேஸ்வரன் சாய்ராம் மற்றும் திருமதி பிரியங்கா அகர்வால் சாய்ராம் ஆகியோர் சேவை செய்தனர். மையப் பொறுப்பாளர் திருமதி கீதா சாய்ராம், நமது மருத்துவ சேவையைப் பாராட்டினார்.

இறுதியில் பகவானுக்கு மங்கள ஆரத்தி அர்ப்பணிக்கப்பட்டு அனைவருக்கும் பகவானின் பிரசாதம் வழங்கப்பட்டது.





# ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு

காஞ்சிபுரம் தெற்கு | 20.3.25 | **2** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் ஸ்ரீ சத்ய சாயி பிரேம தரு திட்டத்தின் கீழ் 20.03.2025 அன்று 02 மரக்கன்றுகள் தாம்பரம் சமிதியின் உறுப்பினரால் நடப்பட்டது. மரக்கன்றுகளை நடும் பொழுது சாய் காயத்ரி உச்சரிக்கப்பட்டது.



# ஆரி வேலை பயிற்சி வகுப்பு தொடக்க விழா

காஞ்சிபுரம் தெற்கு 9.3.25 **18** பயனாளிகள்

**2** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் பார்வதி நகர் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமிதியின் சார்பாக கரசங்காலில் அமைந்துள்ள பொதுக் கூடத்தில் 09/03/2025 அன்று ஆரி வேலை பற்றிய பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டது. இதில் 18-க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று பயன்பெற்றனர். இந்த பயிற்சி வகுப்பு 45 நாட்கள் நடைபெறும்.





# அத்தியாவசிய பொருட்கள் விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு | 30.3.25 | 50 பயனாளிகள் | 10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால் யுகாதி மற்றும் நமது அன்பு பகவானின் ஆராதனை மஹோத்ஸவத்தை முன்னிட்டு கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 30/03/2025 அன்று வெங்கிடாபுரம் ஞானோதயா பள்ளி விடுதியில் தங்கிப்படிக்கும் பள்ளியின் ஏழைஎளிய மாணவ மாணவிகளுக்கு சமிதியின் சார்பாக தினசரி உபயோகப் பொருட்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சி பள்ளி வளாகத்தில் காலை 11 மணிக்குத் தொடங்கியது ஓம்காரம், வேத பாராயணம் மற்றும் சிறிய பஜனையுடன் தொடங்கியது.

இந்தச் சிறப்பு சேவை நிகழ்ச்சியில் சமிதியின் சார்பாக பங்கேற்ற பாலவிகாஸ் மாணவ மாணவிகள் எண்ணிக்கை -7 ஆகும். சிறப்பு அழைப்பாளர்களாக நமது மாவட்டத்தலைவர் திரு சங்கரநாராயணன் சாய்ராம் மற்றும் மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி மீனாட்சி சாய்ராம் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தினசரி உபயோகப் பொருட்களை பள்ளி விடுதியின் மாணவ மாணவிகளுக்கு வழங்கினர்.

சமிதியின் ஒருங்கிணைப்பாளர் தனது தொடக்க உரையில் தினசரி உபயோகப் பொருட்கள் நமது கூடுவாஞ்சேரி சமிதி சார்பாக வழங்கியமைக்கு நமது பகவானுக்கு நன்றி கூறினார். நமது

மாவட்டத் தலைவர் திரு சங்கரநாராயணன் சாய்ராம் தமது சிறப்புரையில் மாணவர்கள் தங்கள் தேர்வுகளை மனோ தைரியம், தன்னம்பிக்கை, மற்றும் கடின உழைப்புடன் எதிர்கொள்ள வலியுறுத்தினார்

பிறகு உரையாற்றிய நமது மாவட்ட கல்வி ஒருங்கிணைப்பாளர் திருமதி மீனாட்சி சாய்ராம் தேர்வுகளுக்குத் தயார் செய்ய முழு கவனத்துடன் படிக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார், மேலும் முழுக்கவனத்தை தேர்வுக்குத்தயாராக எவ்வாறு வளர்த்துக்கொள்ள வேண்டும் என தெளிவாக விளக்கினார்.

தினசரி உபயோகப் பொருட்கள் விபரம் குளியல் சோப் -40 சலவை சோப்-40 பல் துலக்கும் பிரஷ் -40 பல் துலக்கும் பேஸ்ட் -40 ஷாம்பு -6பாட்டில் பினாயில் -5லிட்டர் பாத்ரூம் கிளீனர் 5 லிட்டர் பள்ளித்தலைமை ஆசிரியை நமது சமிதியின் சார்பாக பொருட்கள் வழங்கியதற்கு நன்றி கூறினார். மங்கள ஆரத்திக்குப்பிறகு பள்ளிவிடுதி அனைத்து குழந்தைகளுக்கும் சமிதி சார்பாக இனிப்புகள் வழக்கப்பட்டன.





# பாலவிகாஸ் குழந்தைகளுடன் ஆன்மீக சுற்றுலா

காஞ்சிபுரம் தெற்கு | 23.3.25 | 10 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக 23/03/2025 அன்று சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர் கூடுவாஞ்சேரி நந்தீஸ்வரர் கோவிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இதில் பாலவிகாஸ் குருமார்கள் பங்கேற்று அனைவரையும் வழிநடத்தினர்.



# மாதாந்திர மகிளா தினத் திருவிளக்கு பூஜை

காஞ்சிபுரம் தெற்கு | 19.3.25 | 4 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக மாதாந்திர மகிளா தினத் திருவிளக்கு பூஜை 19/03/2025 அன்று என்.ஜி.ஒ நகர் பாலவிகாஸ் மையத்தில் நடைபெற்றது. இதில் 4 மகளிர் பங்கேற்று பகவானின் அருளைப் பெற்றனர்.





# முதியோர் இல்ல சேவை

காஞ்சிபுரம் தெற்கு 2.3.25 **70** பயனாளிகள்

**18** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெருங்கருணையினால், கூடுவாஞ்சேரி சேவா சமிதியின் சார்பாக நமது அன்பு பகவானின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சமிதியின் பாலவிகாஸ் குழந்தைகள் 02/03/2025 அன்று பொத்தேரியிலுள்ள வி.ஜி.என் காலனி முதியோர் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

காலை 11.30 மணிக்கு இல்லத்திலுள்ள ஷீரடி ஸாயி சன்னதியில் வேதம் மற்றும் சிறப்பு பஜனை பாலவிகாஸ் மாணவமாணவிகள் நிகழ்த்தினர். முதியோர் இல்லத்திலுள்ள 70 முதியோர் ஒவ்வொருவருக்கும் பாலவிகாஸ் குழந்தைகள் மற்றும் சேவாதளத் தொண்டர்கள் நமது சமிதியின் சார்பாக உணவுடன் வாழைப்பழம் மற்றும் பிஸ்கட் பாக்கட்டுடன் நாராயண சேவை செய்தனர். பாலவிகாஸ் குழந்தைகளின் பஜனையை இல்லத்திலுள்ள முதியோர்கள் வெகுவாக ரசித்துப் பாராட்டினர். உணவு பரிமாறிய பாலவிகாஸ் குழந்தைகளைப் பாராட்டி முதியவர்கள் தங்கள் சந்தோஷத்தை வெளிப்படுத்தினர்.

சமிதி சார்பாக பாலவிகாஸ் இரண்டு மற்றும் மூன்றாம் பிரிவு மாணவ மாணவிகள் மற்றும் முன்னாள் மாணவர்கள் உட்பட 18 மாணவ மாணவிகள், சமிதியின் குருமார்கள் உட்பட 8 சமிதி

உறுப்பினர்கள் மற்றும் சேவாதளத் தொண்டர்கள் கலந்துகொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.





# முதியோர் இல்லத்தில் அமிர்த கலச விநியோகம்

காஞ்சிபுரம் தெற்கு | 17.3.25 | **30** பயனாளிகள் | **4** சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் கருணையால் மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக, 17/03/2025 அன்று திருப்போரூர் சங்கரா முதியோர் இல்லத்தில் வசிக்கும் 24 முதியோர்களுக்கு அமிர்த கலசங்கள் வழங்கப்பட்டன. பின்னர் அவர்களுடன் சிறப்பு பஜனை செய்யப்பட்டது. மங்கள ஆரத்தியுடன் இந்த சேவை நிறைவடைந்தது.



# பாலவிகாஸ் பெற்றோர்களுடன் கலந்துரையாடல்

காஞ்சிபுரம் தெற்கு 9.3.25 17 சேவாதளத்தொண்டர்கள்

சுவாமியின் கருணையால் மறைமலை நகர் சேவா சமிதியின் சார்பாக பாலவிகாஸ் குரு பத்மப்ரியா அவர்களின் இல்லத்தில் பாலவிகாஸ் பெற்றோருக்கான கலந்துரையாடல் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. இதில் 6 குழந்தைகளின் தாய்மார்கள் கலந்து கொண்டனர். பாலவிகாஸ் மூத்த குரு ஸ்ரீமதி. ராஜலக்ஷ்மி சாய்ராம் சிறப்புரை ஆற்றினார். இதில் பாலவிகாஸ் வகுப்பின் முக்கியத்துவம் மற்றும் பெற்றோர்களின் பங்கு குறித்து சிறப்பாக எடுத்துரைத்தார். நிகழ்ச்சி ஒரு கலந்துரையாடல் போல அமைந்தது. மங்கள ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது.

# மாத்ரு பூஜா

நீலகிரி | 2.3.25 | 130 பயனாளிகள் | 80 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பேரருளால் நீலகிரி மாவட்டம் சாய் கைலாசில் 02-03-2025 அன்று மாத்ரு பூஜா நடைப்பெற்றது அதில் 80 பாலவிகாஸ் மாணவர்களும் 80 பெற்றோரும் 50க் கு மேற்பட்ட சாய் பக்தர்களும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.



# இலவச பைத்தான் வகுப்பு ஆரம்பம்

கரூர் 30.3.25 1 பயனாளிகள் 15 சேவாதளத்தொண்டர்கள்

கரூர் மாவட்டம் வெங்கமேடு சமிதியில் 30-03-2025 அன்று காலை இலவச பைத்தான் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. இன்றைய நவீன காலக்கட்டத்திற்கு தேவையான கணினி அறிவினை சாயி அன்பர்கள் பெற வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் இந்த வகுப்பு குறிப்பாக மாணவர்களுக்கு பயன்படும் நோக்கில் தொடங்கப்பட்டு உள்ளது. இந்த வகுப்பை நடத்துபவர் முன்னாள் பாலவிகாஸ் மாணவி. இந்த நிகழ்ச்சியில் 15 பேர் கலந்து கொண்டார்கள். பெண்கள் 7 பேர், ஆண்கள் 8 பேர்.



# யுகாதி பண்டிகை சிறப்பு பஜன்

கரூர் | 30.3.25 | 13 பயனாளிகள் | 13 சேவாதளத்தொண்டர்கள்

கரூர் மாவட்டம் காந்திகிராமம் சமிதியில் 30-03-2025 யுகாதி அன்று மாலை சமிதி வளாகத்தில் சிறப்பு பஜனை நடைப்பெற்றது. 7 பெண்கள், 5 ஆண்கள் மற்றும் ஒரு பாலவிகாஸ் மாணவி கலந்து கொண்டனர். பஜனையின் முடிவில் அனைவருக்கும் ஸ்வாமியின் அருட்ப்ரசாதம் வழங்கப்பட்டது.



# ஸ்ரீ சத்ய சாயி பெற்றோர்மை மற்றும் பெற்றோர்களுக்கு பாத பூஜை

ஈரோடு | 23.3.25 | 30 பயனாளிகள் | 30 சேவாதளத்தொண்டர்கள்

இறைவன் ஸ்ரீ சத்ய சாயியின் பெருங்கருணையினால் ஈரோடு மாவட்டம் சித்தோடு சமிதியில் மார்ச் மாதம் 23ம் தேதி மாலை 05:00 மணி முதல் இரவு 08:00 மணி வரை ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் பெற்றோர்களுக்கான பெற்றோர்மை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் காந்திநகர் சமிதியின் ஒருங்கிணைப்பாளர் மரு.என் .வி.கோவிந்தராஜு அவர்கள் பெற்றோர்மையின் முக்கியத்துவம் குறித்தும் ஸ்ரீ சத்ய சாயி பாலவிகாஸ் குழந்தைகளின் வளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகிறது என்பது பற்றியும் எடுத்துரைத்தார். பிறகு பாலவிகாஸ் குழந்தைகள் தங்கள் பெற்றோருக்கு பாத பூஜை செய்து அவர்களின் ஆசிர்வாதங்களை பெற்றனர்.

இதில் பாலவிகாஸ் மாணாக்கர்கள் 7 பேர், அவர்களின் தாய்மார்கள் 6 பேர், தந்தை 1, பாலவிகாஸ் முன்னாள் மாணவர்கள் 2 பேர், முன்னாள் மாணவிகள் 2 பேர், அவர் தம் தாய்மார்கள் 4 பேர், தந்தையர் 4 பேர் கலந்து கொண்டனர். இதில் பாலவிகாஸ் குருமார்கள் 4 பேர் உள்பட மொத்தம் 30 பேர் கலந்து கொண்டு பகவானின் பேரருள் பெற்றனர்.





# திருவாதிரை பூஜை

ஈரோடு 8.3.25

பகவானின் தெய்வீக ஆசீர்வாதங்களுடன் அவரின் ஜென்ம நட்சத்திரமான திருவாதிரை அன்று 8.3.2025 பவானி சமிதியில் சிறப்பு பூஜை நடைபெற்றது. இதில் ஸ்ரீருத்ரம் சுவாமியின் அவர் தம் சரிதம், அஷ்டோத்திர பாராயணம் மற்றும் சிறப்பு பஜன் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து மங்கள ஹாரத்தியுடன் சிறப்பு பஜனையானது நிறைவு பெற்றது. அன்று கலந்து கொண்ட அனைவருக்கும் பகவானின் அருள் கிடைக்கப்பெற்றது.



# பௌர்ணமி பூஜை

ஈரோடு 14.3.25

பகவானின் பெரும் கருணையினால் 14.3.2025 அன்று ஈரோடு, சித்தோடு சமிதியில் பௌர்ணமி பூஜை மற்றும் ம்ருத்யும்ஜெய ஹோமமும் சிறப்பாக நடைபெற்றது. இதில் 15 க்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் அருளைப் பெற்றனர்.



# ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம்

ஈரோடு 11.3.25 13 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 11.3.2025 அன்று மாலை 6:15 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் ஈரோடு மூலப்பாளையம் சமிதி மஹிளா உறுப்பினர் திருமதி.கலை செல்வி அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. இதில் 5 மஹிளா அன்பர்கள் மற்றும் 2 பாலவிகாஸ் பெண் குழந்தைகள் கலந்துகொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர். 14.3.2025 அன்று மாலை 6.15 மணி முதல் 7 மணி வரை ஸ்ரீலலிதா சஹஸ்ரநாம பாராயணம் மூலப்பாளையம் சமிதி மஹிளா உறுப்பினர் திருமதி.கீர்த்திகா பிரகாஷ் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. இதில் 9 மஹிளா அன்பர்கள், 1 ஆண், 2 பாலவிகாஸ் பெண்கள் மற்றும் 1 யுவதி மஹிளா கலந்து கொண்டு பகவானின் ஆசிர்வாதத்தை பெற்றனர்.

19.3.2025 அன்று மஹிளா தினத்தை முன்னிட்டு சூரம்பட்டி அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோவிலில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் சிறப்பாக நடைபெற்றது. இதில் 10 மஹிளா அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர். 21/3/2025 அன்று பெருந்துறை திருமதி.லட்சுமி ஹரி அவர்களது இல்லத்தில் ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம பாராயணம் பகவான் அருளால் சிறப்பாக நடைபெற்றது. இதில் 15 மஹிளா அன்பர்கள் கலந்து கொண்டு பகவானின் ஆசிகளைப் பெற்றனர்.





# பஜன் பயிற்சி பட்டறை

ஈரோடு | 7.3.25 | 18 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் திருவருளால் ஈரோடு கிழக்கு சாய் சமிதியில் 7.3.2025 அன்று மதியம் 2:30 மணி முதல் 4.30 மணி வரை பஜன் பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் பயிற்சியுடன் விளக்கங்கள் மற்றும் கருத்து பரிமாற்றம் சிறப்பாக நடைபெற்றது. இந்த வகுப்பை திரு.லேனா ராமநாதன் அவர்கள் நேரிலோ அல்லது இணையவழி மூலமாகவோ வாரம் ஒரு முறை எடுத்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த வாரம் நடந்த பயிற்சி முகாமில் 4 ஆண்கள் மற்றும் 14 மஹிளா அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.



# ஆலய திருப்பணி

ஈரோடு 17.3.25 **7** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளாசியோடு சென்னிமலை அருகில் உள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு நஞ்சுண்டேஸ்வரர் ஆலயத்தில் 17.3.25 அன்று நமது சாய் சேவாதளத் தொண்டர்கள் இரவு 11:30 மணி முதல் அதிகாலை 6:00 மணி வரை (கூட்டத்தை கட்டுப்படுத்தும் சேவை) சேவை புரிந்தனர்.



# கொங்கு அறிவாலயம்

ஈரோடு 2.3.25 **50** பயனாளிகள்

பகவானின் பெரும் கருணையினால் ஈரோடு மாவட்டம் காந்திநகர் சமிதியின் சேவை கொங்கு அறிவாலயத்தில் ஞாயிறுதோறும் அங்குள்ள குழந்தைகளுக்கு விபூதி பிரசாதம் மற்றும் இனிப்புகள் வழங்கப்படுகிறது. இதில் 50 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

# மஹிளா தினம்

ஈரோடு | 19.3.25 | **90** பயனாளிகள் | **30** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 19.3.2025 மஹிளா தினத்தன்று ஈரோடு மாவட்ட கவுண்டன்புதூர் சமிதியில் சிறப்பு பஜனை நடைபெற்றது. இதில் 30-க்கும் மேற்பட்ட மஹிளா அன்பர்கள் கலந்து கொண்டனர். சிறப்பு பஜனைத் தொடர்ந்து பகவானிற்கு மங்கள ஹாரத்தி எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 90 அன்பர்களுக்கு நாராயண சேவை வழங்கப்பட்டது.





# சாய் ஒற்றுமை கிரிக்கெட் போட்டி

ஈரோடு 23.3.25

பகவானின் பெரும் கருணையினால் 22nd மற்றும் 23.3.2025 அன்று மாநில அளவிலான கிரிக்கெட் விளையாட்டு போட்டிகள் ஈரோடு நந்தா கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. பகவான் கூறியபடி (“life is a game, play it”) என்பதற்கு இணங்க முதல் நாள் 22nd அன்று முதல் அரை இறுதி ஆட்டம் கோயம்புத்தூர் மற்றும் சிவகங்கை மாவட்டத்திற்கு இடையே காலை 8:30 மணி முதல் 12 மணி வரை நடைபெற்றது. இதில் சிவகங்கை அணியினர் வெற்றி பெற்றனர்.

மதியம் 1:30 மணிக்கு காஞ்சி தெற்கு மற்றும் நாமக்கல் அணியினர் இடையே இரண்டாவது அரை இறுதி போட்டி நடைபெற்றது. இதில் நாமக்கல் வெற்றி பெற்றது. 23.3.2025 அன்று காலை 8:30 மணிக்கு இறுதி ஆட்டம் சிவகங்கை மற்றும் நாமக்கல் அணிகளுக்கு இடையே நடைபெற்றது. இந்த போட்டியில் நாமக்கல் அணி வெற்றி பெற்றது. இதில் 150 அன்பர்களுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு விளையாட்டை கண்டு களித்தனர்.

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மார்ச் 2025


Love All, Serve All
Help Ever, Hurt Never





Love All, Serve All
Help Ever, Hurt Never

# சேவா வாணி

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு

மார்ச்
2025

# இலவச கண் மருத்துவ முகாம்

ஈரோடு 30.3.25 **92** பயனாளிகள்

பகவானின் பெரும் கருணையினால் 30.3.2025 அன்று ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீ சத்ய சாயி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் ஸ்ரீ சத்யசாய் நிறுவனங்கள் மற்றும் கோவை சங்கரா மருத்துவ மையம் இணைந்து நடத்திய இலவச கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 92 வெளி நோயாளிகள் கலந்து கொண்டனர். அதில் 33 நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.





## வாசகர் வட்டம்

ஈரோடு 30.3.25 **33** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் அருளால் 30.3.2025 அன்று கீதா வாஹினி வாசகர் வட்டம் 6.15 மணிக்கு தொடங்கி 7 மணி வரை இணையவழியில் சத்சங்கம் நடைபெற்றது. இதில் அத்தியாயம் 8-ல் 5 முதல் 8 வரை உள்ள ஸ்லோகங்களைப் பற்றி மிக அழகாக டாக்டர். பேராசிரியர் டி.எஸ்.பாலகிருஷ்ணன் எடுத்து கூறினார். இதில் 15 அன்பர்கள் கலந்து கொண்டனர். பகவானின் கருணையினால் 7.3.2025 அன்று ஸ்ரீ சத்யசாய் சத்சங்கம் இணையவழியில் நடைபெற்றது. இதில் அன்பர்கள் கேட்ட சந்தேகங்களை டாக்டர்.என்.வி.கோவிந்தராஜு மற்றும் டாக்டர். பேராசிரியர் டி.எஸ்.பாலகிருஷ்ணன் இருவரும் அழகாக விளக்கிக் கூறினார்கள்.

# நாராயண சேவை

திருச்சி 4.3.25

பகவானின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சமிதியினரால் மார்ச் மாதத்தில் அனைத்து செவ்வாய் கிழமைகளிலும் ஸ்ரீரங்கம் தாய் சேய் நலவிடுதியில் அங்கு வரும் தாய்மார்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டன இதில் மூன்று மகிளா சேவாதல தொண்டர்கள் கலந்து கொண்டு சேவை செய்தனர். கல்லுக்குழி சமிதியினரால் மலைக்கோட்டை தாயுமானவர் நடுநிலை பள்ளியில் மார்ச் மாதத்தில் தினமும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது.

19.3.25 அன்று மகிளா தினத்தை முன்னிட்டு புதுக்கோட்டை மெயின் சமிதி சார்பாக நேசக்கரம் முதியோர் இல்லத்தில் நாற்பத்தி ஐந்து நபர்களுக்கு இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. திருச்சி கே கே நகர் சமிதி சார்பாக அன்னை முதியோர் இல்லம், அன்னை குழந்தைகள் காப்பகம் மற்றும் பார்வையற்றோர் பள்ளி முதலிய இடங்களுக்கு 1085 இட்லிகள் வழங்கப்பட்டன. ஸ்ரீரங்கம் சமிதி சார்பாக 1340 இட்லிகள் சாம்பாருடன், லூப்ரா தாமஸ் பிளைன்ட் ஹோமுக்கு வழங்கப்பட்டது.

## தண்ணீர் பந்தல்

**திருச்சி** 1.3.25

நமது சாயி அன்னையின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை பெரியார் நகர் சமிதியின் சார்பாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நார்த்தாமலை முத்துமாரியம்மன் கோவில் பூச்சொரிதலை முன்னிட்டு தண்ணீர் பந்தல் அமைக்கப்பட்டது.





# மருத்துவ முகாம்

திருச்சி | 9.3.25 | 163 பயனாளிகள் | 11 சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் 9.3.25 அன்று திருச்சி மாவட்டம் புதுக்கோட்டை மெயின் சமிதி மற்றும் குழிபிறை நகரத்தார் இணைந்து குழிபிறையில் இலவச பொது மருத்துவ முகாம் நடத்தினர். பயனாளர்கள் எண்ணிக்கை :163(75+88), மருத்துவர்கள் எண்ணிக்கை:05 சேவாதள் எண்ணிக்கை:06.





# திறன் மேம்பாட்டு மையத்தின் இரண்டாம் ஆண்டு தொடக்க விழா

திருச்சி | 23.3.25 | **150** பயனாளிகள்

**50** சேவாதளத்தொண்டர்கள்

பகவான் பாபாவின் பெரும் கருணையினால் பாலக்குறிச்சி சமிதியில் துவக்கப்பட்டுள்ள திறன் மேம்பாட்டு மைய இரண்டாம் ஆண்டு தொடக்க விழா 23.03.25 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பால விகாஸ் மாணவ மாணவிகள், பால விகாஸ் குருமார்கள், சேவாதள், பக்தர்கள், பாலவிகாஸ் குழந்தைகளின் தாய்மார்கள் கலந்துகொண்டனர்.





# வசந்த நவராத்திரி உத்சவம்

திருச்சி 31.3.25

நமது சாயி அன்னையின் பெரும் கருணையினால் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சத்ய சாயி ஆன்மீக மையத்தில் அருள் பாலிக்கும் காயத்ரி தேவிக்கு 31.3.25 முதல் 9 நாட்களுக்கு வசந்த நவராத்திரி உற்சவம் மிகச்சிறப்பாக நடைபெற்றது இதில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த அனைத்து சமிதியை சார்ந்த மகிளாக்களும் ஒவ்வொரு நாளும் கலந்து கொண்டு லலிதா சகஸ்ரநாம பாராயணம் மற்றும் பஜனையினை சிறப்பாக செய்தனர்.



# ஸ்ரீ சீரடி சாயி சத் சரித சப்தாகம்

திருச்சி 20.3.25 **70** சேவாதளத்தொண்டர்கள்

பகவானின் பெரும் கருணையினால் சத வருஷ ஜன்மோத்சவம் நிகழ்ச்சியாக ஸ்ரீ சீரடி சாயி சத்சரித சப்தாகம் ஸ்ரீ சத்ய சாயி ஆன்மீக மையம் ஸ்ரீரங்கத்தில் 20.3.25 முதல் 27.3.25 வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இதில் ஏழு நாட்களும் 70க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டனர். தினமும் மகா மங்கள ஆரத்தியுடன் நாராயண சேவை நடைபெற்றது.






# நீர் மோர் விநியோகம்

திருச்சி 18.3.25

நமது சாயி அன்னையின் அளவிட முடியாத பெரும் கருணையுடன் இந்த வருடமும் திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் சமிதி சார்பாக ஸ்ரீ சத்ய சாயி ஆன்மீக மையத்தில் பந்தல் அமைத்து நீர்மோர் வினியோகம் 18.3.25 முதல் தொடங்கப்பட்டது. விநியோகத்தில் தினமும் நான்கு சேவாதள தொண்டர்கள் சேவை புரிந்து வருகின்றனர்.



# மளிகை பொருட்கள் மற்றும் இஸ்திரி பெட்டி வழங்குதல்

திருச்சி 25.3.25 **2** பயனாளிகள்

பகவான் பாபாவின் பெருங்கருணையினால் திருச்சி மாவட்டம் பாலக்குறிச்சி சமிதி சார்பாக 25.3.25 அன்று பாலக்குறிச்சியில் டீக்கடை பலகார கடை நடத்தும் திரு குமார் அவர்கள் பொருளாதார சூழ்நிலை காரணமாக மிகவும் சிரமப்பட்ட நேரத்தில் பகவானின் அருளால் அந்த கடைக்கு தேவையான பொருட்கள் சுவாமியின் பிரசாதமாக வழங்கப்பட்டது. மேலும் பாலக்குறிச்சியில் வசிக்கும் சலவை தொழிலாளி சரஸ்வதி அம்மாவுக்கு சுவாமியின் அருளால் துணி தேய்க்கும் இஸ்திரி பெட்டி சுமார் 6000 ரூபாய் அளவில் சுவாமியின் பிரசாதமாக வழங்கப்பட்டது.





# சேவா வாணி




எதிர் வரும் மாதங்களில் தங்கள் மாவட்ட முக்கிய நிகழ்வுகள் இந்த மின் துணை இதழில் இடம் பெற, தெளிவான புகைப்படங்களுடன், தமிழில் நிகழ்ச்சி பற்றிய சிறு குறிப்புடன், மாவட்டத் தலைவர் வழியாக ssssotnreporting@gmail.com முகவரிக்கு அஞ்சல் அனுப்பவும்.

ஸ்ரீ சத்ய சாய் தமிழ்

Sri Sathya Sai Media Centre

Prasanthi Connect

ஸ்ரீ சத்ய சாய் சேவா நிறுவனம் (இந்தியா)

தமிழ்நாடு - தெற்கு